# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 20 வியாழக்கிழமை (03-04-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:128


# யாழ். மாநகர சபைக் காணிப் பகுதியில் படைத்தளம் அமைக்கும் பணி நிறுத்தம்

## மாற்று இடத்தை தெரிவுசெய்ய படை அதிகாரிகள் குழு வரும்

கொழும்பு,ஏப்ரல்3

**யாழ். சுபாஸ் மற்றும் ஞானம்ஸ் ஹோட்டலில் அமைந்துள்ள பிரிகேட் தலைமையகத்தை யாழ்.கோட்டைக்கு அருகே மீளமைக்கும் திட்டத்தைக் கைவிடவும், அதற்குப் பதிலாக யாழ்.மாநகரசபைப் பிரதேசத்தில் அல்லது அதற்கு அண்டிய பிரதேசத்தில் உள்ள வேறோர் இடத்தில் அதனை நிறுவவும் அரசுத் தரப்பு இணங்கியிருக்கின்றது. யாழ்.மாநகர சபை எல்லையினுள் தற்பொழுது அமைக்கப்பட்டுவரும் இராணுவத் தளக் கட்டுமானப் பணிகளை உடனடியாக நிறுத்தவும் ஒப்புக்கொண்டுள்ளது.**

முகாம் அமையவிருக்கும் புதிய இடம் குறித்து நேரில் ஆராய்வதற்காக உயர் பாதுகாப்பு அதிகாரிகள் குழு ஒன்று தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் சகிதம் எதிர்வரும் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு நேரடியாக வருகை தரவிருக்கின்றது.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தலைமையிலான அரசுத் தரப்புக் குழுவுக்கும் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் குழுவுக்கும் இடையில் நேற்றுக் காலை கொழும்பில் நடைபெற்ற சந்திப்பின்போது இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

யாழ்.பிரிகேட் தலைமையகத்தை யாழ்.கோட்டை அருகே அமைப்பதற்கான ஏற்பாடுகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அது தொடர்பாக தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்றுமுன்தினம் பிரதமர் ரணிலைச் சந்தித்து தமது கடுமையான ஆட்சேபத்தைத் தெரிவித்திருந்தனர். இதையடுத்து, பாதுகாப்பு அமைச்சருடனான இந்த விசேட சந்திப்பை பிரதமர் ஏற்பாடு செய்திருந்தார்.

நேற்றுக்காலை 10.30 மணிக்கு ஆரம்பமான இந்தச் சந்திப்பில் அமைச்சர் திலக் மாரப்பன, அமைச்சின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ, அமைச்சின் மேலதிக செயலாளர் கரலியத்த, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல மற்றும் மூத்த இராணுவ அதிகாரிகளும் எம்.பிக்களான ஜி.ஜி.கஜேந்திரகுமார்,

(14ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் ரெலோ உறுப்பினர் மட்டக்களப்பில் சுட்டுக் கொலை!

மட்டக்களப்பு,ஏப்.3

மட்டக்களப்பில் இராணுவத்தினின் உளவுப் பிரிவுடன் இணைந்து இயங்கி வந்தவர் என்று கூறப்படும் ரெலோ அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் நேற்றுச் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்.

'ரெலோ வரதன்' என்று அழைக்கப்படும் சின்னத்தம்பி ரஞ்சன் என்ற இவர், நேற்று முற்பகல் 11 மணியளவில் ஆரையம்பதி மாவட்ட வைத்திய சாலைக்கு முன்பாக பொலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒருவருடன் உரையாடிக் கொண்டு நின்றவேளை மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் இவரை நோக்கி பிஸ்டலால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றார் என்று கூறப்படுகிறது. முகம், தலை, கழுத்து ஆகிய பகுதிகளில் நான்கு தடவைகள் சுடப்பட்ட இவர், அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

சுமார் எட்டு ஆண்டுகளாக இவர் இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினருடனும், விசேட அதிரடிப்படையினருடனும் இணைந்து செயற்பட்டு வந்தவர் என்று கூறப்படுகிறது.

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு ஆதரவாக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ரெலோவின் தலைமைப் பீடத்தால் கட்சியிலிருந்து விலக்கப்பட்ட இவர் படையினரின் உளவுப் பிரிவினருடன் இணைந்து செயற்பட்டு வந்தார். (ஐ-4-15)

### உள்ளூராட்சி மன்றங்களின் விவரம் திரட்டல்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் இருக்கும் உள்ளூராட்சி சபைகள் தொடர்பான விவரங்களைத் திரட்டும் நடவடிக்கைகளை தேர்தல் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விவரங்களை உடனடியாக திரட்டி தமக்கு அனுப்பிவைக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க வடக்கு-கிழக்கிலுள்ள சகல மாவட்டங்களினதும் தேர்தல் ஆணையாளர்களுக்கு அறிவித்துள்ளார்.(ஐ-4)

### சிறுமிகளின் சடலங்கள் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.3

ஊர்காவற்றுறை, சுருவில் பகுதியில் குளத்தில் மூழ்கி உயிரிழந்த சிறுமிகள் மூவரின் சடலங்கள் மரண விசாரணையின் பின் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டன.

ஊர்காவற்றுறை நீதிவான் பா.சுப்பிரமணியம் நேற்றுக்காலை ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரிக்குச் சென்று மரண விசாரணை நடத்தினார்.

ஊர்காவற்றுறை பொலீஸார் சாட்சிகளை நெறிப்படுத்தினர். (ஐ)

## பக்தாத் நோக்கி கூட்டணிப் படைகள் முன்னேறுகின்றன

## ஈராக்கில் புனிதப் போரை பிரகடனம் செய்தார் சதாம்!



பக்தாத்,ஏப்.3

அமெரிக்கப் படைகள் நேற்று பக்தாத்தை நோக்கி தங்களின் முன்னேற்றத்தை விரைவுபடுத்தின என்று செய்திகள் தெரிவித்தன. இதேவேளை, அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளுக்கு எதிராக புனிதப் போரை (ஜிஹாத்) ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் பிரகடனப்படுத்தியிருக்கிறார்.

புனிதப் போர் பிரகடனத்துக்கான அவரது அறிக்கை ஈராக் தொலைக்காட்சியில் வாசிக்கப்பட்டது. "அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் எந்த இடத்தில் இருந்தாலும் அவற்றுக்கு எதிராகச் சண்டையிடுங்கள்" என்று அறிக்கையில் கூறப்பட்டது.

ஈராக்கில் போர் நிறுத்தம் செய்வது குறித்த அமெரிக்கப் படைகள் ஈராக் அரசுடன் பேச்சு நடத்தி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஈராக் படைகள் நடத்தும் தற்கொலைக் குண்டுதாரிகளின் தாக்குதலால் பீதியடைந்திருப்பதை அடுத்தே அமெரிக்கப் படைகள் போர் நிறுத்தம் குறித்து பேசி வருகின்றன.

போர் நிறுத்தத்திற்கோ அல்லது எந்தவிதமான சமாதான உடன்படிக்கைக்கோ ஈராக் முன்வராது என அந்நாட்டுத் துணைப் பிரதமர் தாரிக் அஸீஸ் திட்டவட்டமாகக் கூறினார்.

லெபனான் நாட்டுத் தனியார் தொலைக்காட்சியான எல்.பி.சி.ஐ.ரிவிக்கு தாரிக் அஸீஸ் அளித்த பேட்டியில், "இந்தப் போர் முடிவுக்கு வர வேண்டுமானால் ஈராக்கை விட்டு கூட்டுப் படைகள் நிபந்தனையின்றி வெளியேற வேண்டும். 1991ஆம் ஆண்டு முதல் ஈராக் மீது விதிக்கப்பட்ட தடைகள் திரும்பப் பெறப்பட வேண்டும்.

"எங்கள் நாட்டுக்குள் ஊடுருவிய இந்தக் கும்பலுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்யவோ அல்லது சமாதான உடன்படிக்கை செய்யவோ நாங்கள் தயாராக இல்லை.

"இந்தப் போரில் நாங்கள் நிச்சயம் வென்று காட்டுவோம். ஈராக்கிய மக்களுக்குப் பெரும் துயரத்தையும் நஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ள அமெரிக்காவும், பிரிட்டனும் அதற்கான இழப்பீட்டை எங்கள் மக்களுக்கு வழங்க வேண்டும்" - என்றார்.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் றொனால்ட் ரம்ஸ்பீல்ட் போர் நிறுத்த செய்தி குறித்து மறுத்துள்ளார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### நேற்றிரவு பலத்த மழை: வவுனியா இருளில்

வவுனியா,ஏப்.3

வவுனியாவில் நேற்றிரவு 8 மணி முதல் சுமார் அரைமணி நேரம் இடி முழக்கத்துடன் கூடிய பலத்த மழை பெய்தது.

இதனால் வவுனியா முழுவதுக்குமான மின்சாரம் துண்டிக்கப்பட்டதுடன் தொலைத்தொடர்பும் தடைப்பட்டது.

எனினும், நேற்றுமுன்னிரவு தொலைபேசிச் சேவைகள் வழமைக்குத் திரும்பின என்றும் -

மின்விநியோகம் தொடர்ந்தும் துண்டிக்கப்பட்டு இருந்ததாகவும் - அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (எ-164)

## திருமலையில் அடுத்த வாரம் இசை, நடன, நாடக விழா

### மானிடத்தின் தமிழ்க்கூடலின் மற்றொரு நிகழ்வு

திருகோணமலை,ஏப்.3

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினால் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட 'மானிடத்தின் தமிழ்க்கூடல்' நிகழ்வின் இரண்டாம் கட்ட நிகழ்வு எதிர்வரும் 8ஆம் திகதி முதல் திருகோணமலையில் இசை, நடன, நாடக விழாவாக நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி தொடக்கம் 12ஆம் திகதிவரை தினமும் மாலை 4 மணிமுதல் திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் இந்த விழா நடைபெறும்.

இந்த விழா தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இசை, நடன, நாடக விழாவில் ஈழத்தின் பாரம்பரிய கலைகள், பண்பாடு ஆகியவற்றை நவீன அரங்க நியமங்களுடன் இணைத்து சிறப்பாக அளிக்கை செய்யப்படவுள்ளன. கலைப் பெருவிழாவின் முக்கிய நிகழ்ச்சிகளாக தமிழகத்துக் கலைஞர்களின் சிறப்பு நிகழ்ச்சிகள், சிங்களப் பாரம்பரிய நவீன அரங்க அளிக்கைகள், ஈழத்தில் புகழ்பெற்ற கலைஞர்களின் இசை, நடன, நாடக நிகழ்ச்சி

(14ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸார் – பொதுமக்கள் உறவை பேணுவதற்கு விரிவான ஏற்பாடுகள்

### பொலீஸ்மா அதிபர் யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஏப்.3

பொதுமக்களுக்கும், பொலீஸாருக்கும் இடையிலான நல்லுறவைப் பேணுவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். பொதுமக்களின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் பொலீஸாரின் செயற்பாடுகள் வெற்றியளிக்காது.

- இவ்வாறு தெரிவித்தார் பொலீஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த பொலீஸ்மா அதிபர், யாழ். தலைமைப் பொலீஸ் நிலையத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். பொலீஸாரின் பணிகள் தொடர்பாக அவர் அப்போது விளக்கமளித் தார்.

பொலீஸ்மா அதிபருடன் பிரதிப் பொலீஸ்மா அதிபர் கீர்த்தி கஜநாயக்கா, வடமாகாண சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஹெரல்ட் அன்ரனி, வடபிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் கே.கஜநாயக்கா, யாழ்பிரதிப் பொலீஸ்மா அதிபர் வித்தாரண ஆகியோரும் உடனிருந்தனர்.

பொலீஸ்மா அதிபர் அங்கு மேலும் கூறியதாவது:-

நான் பதவியேற்று சுமார் ஆறு மாதங்கள் வரை கடந்துள்ளன. சகல பிரதிப் பொலீஸ்மா அதிபர்கள் மற்றும் பொலீஸ் அத்தியட்சகர் (14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



சுகாதாரத் தொண்டர்கள், யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் அலுவலக முன்றிலில் நேற்று மறியற்போராட்டத்தில் ஈடுபட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படங்கள். *(படங்கள் : ரமணன்)*

## நிரந்தர நியமனம் வழங்கக்கோரி

# சுகாதாரத் தொண்டர்கள் நேற்று மறியற்போராட்டத்தில் குதித்தனர்

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்.மாவட்டத்தில் பணிபுரியும் சுகாதாரத் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கவேண்டும் எனக்கோரி நேற்று யாழ்.நகரில் உள்ள மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அலுவலகம் முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் மேற்படி அலுவலகப் பணிகள் யாவும் செயலிழந்தன.

நேற்றுக் காலை முதல் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள மேற்படி சுகாதாரப் பணிப்பாளர் பணிமனை முன்றிலில் கூடிய நூற்றுக்கணக்கான சுகாதாரத் தொண்டர்கள், பல்வேறு சுலோகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு மறியற்போரில் குதித்தனர்.

இதனால், தமது கடமை நிமித்தம் அலுவலகத்துக்கு வருகை தந்த பணிப்பாளர், அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அலுவலகத்தினுள் செல்லமுடியாதநிலை ஏற்பட்டது.

மறியற்போராட்டம் காரணமாக அலுவலகத்தினுள் செல்லமுடியாத நிலை ஏற்பட்டதை அடுத்து சகல பணியாளர்களும் ஆஸ்பத்திரி வீதியல் உள்ள மரங்களின் கீழும் வியாபார நிலையங்களுக்கு அருகிலும் நின்றுவிட்டு 9.30 மணியளவில் தத்தம் வீடுகளுக்குத் திரும்பினர்.

கடந்த 2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதமும் தாம் இவ்வாறு மறியற்போராட்டத்தில் ஈடுபட்டதாகவும்-

அச்சமயம் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என அரச அதிகாரிகள் அளித்த உறுதிமொழியை அடுத்து தாம் அதனைக் கைவிட்டதாகவும் -

எனினும், இன்றுவரையும் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை என்றும் - சுகாதாரத் தொண்டர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இநதத் தடவை நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்ற எழுத்துமூல உத்தரவாதம் தரப்படவேண்டும் என்றும் - அதுவரை தமது போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்றும் - அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை - மறியற்போராட்டத்தில் ஈடுபட்டோர் பல்வேறு சுலோகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியிருந்தனர். அந்தப் பதாகைகளில் குறிப்பிடப்பட்டிருந்த சில சுலோகங்கள் வருமாறு:-

★ நாடாளுமன்ற ஆசனத்தில் அமர்வதற்காக நீங்கள் கூறும் வார்த்தைகள் என்ன? இப்போது எங்கு சென்றுவிட்டீர்கள்?

★ சுகாதார அமைச்சரே மக்களின் தேவையே எமது சேவை.

★ வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள நாங்கள் பலவருடங்களாகக் கடமையாற்றுகின்றோம். நியமனம் தாருங்கள்.

★ நாளும் பொழுதும் நாம்செய்த சேவைகளை ஆளும் நீங்கள் மறக்கலாமா?

(எ-9-10-15-51-139)

# திருமலையில் தொண்டர் ஆசிரியர்கள் நேற்று திடீர் மறியல் போராட்டம்

## அமைச்சு, திணைக்கள பணிகள் பாதிப்பு

திருகோணமலை,ஏப்.3

கடந்த 30 நாள்களாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் வடக்கு-கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்கள் நேற்று திடீரென மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர். மாகாணக் கல்வியமைச்சு, கல்வித் திணைக்களம் என்பனவற்றின் வாசல்களுக்குக் குறுக்கே அவர்கள் மறியலில் ஈடுபட்டனர்.

தொண்டர் ஆசிரியர்களின் இப் போராட்டத்தினால் அமைச்சினதும், திணைக்களத்தினதும் பணிகள் முற்றாகச் செயலிழந்தன. ஊழியர்கள், அதிகாரிகள், அலுவல்களுக்காக வந்த ஆசிரியர்கள் ஆகியோர் உள்ளே செல்ல முடியாமல் திரும்பிச் சென்றனர்.

இவர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் ஐவர் கலந்துகொண்டனர். சிவசக்தி ஆனந்தன, ராஜா குகனேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், மாவை சேனாதிராஜா, க.துரைரெட்ணசிங்கம் ஆகியோரே அந்த ஐந்து எம்.பிக்களுமாவர்.

தொண்டர் ஆசிரியர்களின் கோரிக்கைகள் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும் என்று எம்.பிக்கள் கூறினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவரும் மறியற்போராட்டத்தில் கலந்துகொண்டபோது அவ்விடத்திற்கு வந்த பொலீஸார், இவர்களைக் கலைந்து செல்லுமாறு கோரினர். ஆயினும் மறியற்போராட்டம் தொடர்ந்தது. (எ)

# சமாதானம் குறித்து அமெரிக்கா இரட்டை வேடம் போடுகிறது!

## ஜனாதிபதி சீற்றம்; ஏற்றுக்கொள்ளமுடியாது என்கிறார்



கொழும்பு,ஏப்.3

சமாதானம் தொடர்பாக அமெரிக்கா இன்று இருவேறு கொள்கைகளைக் கடைப்பிடிப்பதாகவும் அதனை தன்னால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறினார்.

யுத்தத்தினால் அனைத்தையும் செய்யமுடியாதெனவும் சகல யுத்தங்களும் பேச்சுக்களின் பின்னரே முடிவுற்றுள்ளன எனவும் கூறிய ஜனாதிபதி, பயங்கரவாதிகள் எனச் சந்தேகித்து மற்றொரு நாட்டைத் தாக்கும் அமெரிக்கா, இங்குள்ள பயங்கரவாதிகளை பூனைக்குட்டிகளாகக் கருதி பேச்சு நடத்துமாறு எமக்குக் கூறுகிறது எனவும் சொன்னார்.

படைவீரர்களைக் கௌரவிப்பதற்காக ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இவற்றைக் கூறினார்.

ஜனாதிபதி அங்கு மேலும் கூறியதாவது:-

அரசு ஆறுசுற்று சமாதானப் பேச்சுக்களை நடத்தியிருக்கிறது. ஆயினும், யுத்தத்துக்குக் காரணமான அடிப்படை விடயங்கள் குறித்து இன்னமும் பேசவில்லை. அடிப்படை விடயங் களைப் பேசுவதை பின்போட்டு வருகிறது.

சமாதானம் பாதுகாக்கப்படுமேயானால் ஜனாதிபதி பதவியினைத் துறந்துவிட்டுச் செல்ல நான் தயார்.

நாட்டின் பாதுகாப்புக்கு, இறைமைக்கு, ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படுமேயானால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டேன்.

அரசின் சமாதான நடவடிக்கைகளுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கியிருக்கிறேன். அரசினதும் நோர்வே அரசினதும் பணத்தைச் செலவழித்து வெளிநாடு செல்லும் பாலசிங்கம், அரச அமைச்சர்களை அருகில் வைத்துக் கொண்டு எதிர்க்கட்சிகளுக்குப் பயமுறுத்தல் விடுக்கிறார் - இவ்வாறு ஜனாதிபதி சொன்னார்.

(எ)

# இலங்கைக்கு உலக வங்கி 80 கோடி டொலர் உதவி

கொழும்பு,ஏப்.3

உலக வங்கி இலங்கைக்கு 80 கோடி டொலர் பெறுமதியான கடன்களையும் நிதியுதவிகளையும் வழங்க முன்வந்திருக்கிறது. நாட்டின் புனரமைப்புப் பணிகளுக்கு இப்பணம் பயன்படுத்தப்படும்.

அரசும் விடுதலைப் புலிகளும் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர் உலக வங்கி இலங்கைக்கு வழங்க முன்வந்திருக்கும் மிகப் பெரும் நிதியுதவி இதுவாகும்.

உலக வங்கியின் பிராந்திய முகாமையாளர் பீட்டர் ஹெரல்ட் இது தொடர்பாக விடுத்திருக்கும் அறிக்கையில், நிலையான சமாதானம், துரித பொருளாதார வளர்ச்சி, வறுமை ஒழிப்பு என்பனவற்றை இலங்கை முன்னெடுத்துச் செல்லமுடியும் எனவும், இதனால் நாட்டு மக்கள் அனைவரும் நன்மையடைவர் எனவும் தெரிவித்திருக்கிறார்.

சுகாதார சேவைகள் புனரமைப்பு, தண்ணீர் விநியோகம், அகதிகள் மீள் குடியமர்வு ஆகியவற்றுக்கு இப்பணம் செலவிடப்படும் எனவும் உலக வங்கி தெரிவித்திருக்கிறது.

(எ)

## மாணவி கொலை வழக்கு; சந்தேகநபருக்கு விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.3

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை மாணவி செ.துவாரகாவின் மர்மமரணம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருநத பாடசாலைக் காவலாளியை எதிர்வரும் 9ஆம் திகதி வரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபரான தில்லையம்பலம் ரமணன் (வயது 21) நேற்று மீண்டும் மன்றில் ஆஜர்செய்யப்பட்டார். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 27ஆம் திகதி மேற்படி பாடசாலையின் ஐந்தாம் தர மாணவியான செல்வராசா துவாரகா (வயது 10) என்பவர் பாடசாலைக் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டது தெரிந்ததே. (ஒ-10)







பொலீஸ்மா அதிபர் ரீ.ஈ.ஆனந்தராஜா நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. பொலீஸ்மா அதிபரை யாழ்.பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹெக்டர் தர்மசிறி, பொலஸ் நிலைய முன்றிலில் வரவேற்பதை முதல் படத்தில் காணலாம். பொலீஸ்மா அதிபர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் எடுக்கப்பட்ட படத்தை இரண்டாவதாகவும், பொலீஸ்மா அதிபருடனான கருத்தரங்கில் பங்குபற்றிய பொலீஸாரில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம். *(படங்கள்: ரமணன்)*



ஈராக்குக்குத் தெற்கேயுள்ள அபு அல்-ஹாஷிப் நகரில் நடந்த சண்டையில் காயமடைந்த ஈராக்கியச் சிறுவன் ஒருவனை சிகிச்சைக்காக தூக்கிச் செல்லும் அமெரிக்கச் சிப்பாய் ஒருவர்.

# ஆற்றைக் கடக்கும் முக்கிய பாலத்தை அமெரிக்கப் படைகள் கைப்பற்றின!

## பக்தாத் செல்லும் நெடுஞ்சாலை அதன் வசம்

கட்டார்,ஏப்ரல்3

**தெற்கில் இருந்து பக்தாத் நோக்கி முன்னேறிவரும் அமெரிக்கத் துருப்பினர், ரைக்ரிஸ் ஆற்றைக் கடக்க மத்திய ஈராக்கியப் பகுதியில் உள்ள பாலத்தைக் கைப்பற்றி உள்ளதாக அமெரிக்கப் படையினர் தெரிவிக்கின்றனர்.**

இதன் மூலம் தெற்கே உள்ள குச் என்ற நகரில் இருந்து பக்தாத்துக்குச் செல்லும் நெடுஞ்சாலை நேற்று புதன்கிழமை அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளது.

பக்தாத் நோக்கி முன்னேறுவதற்கான பாதையில் கூட்டுப் படையினருக்குத் தடையாய் இருக்கும் ஆறுகளைக் கடக்க அமெரிக்காவுக்கு இப்போது வழி கிடைத்துவிட்டது.

"பக்தாத் நோக்கி முன்னேற எமக்குக் கிடைத்த கடைசியான பெரிய பாலம் இது" - என்றார் குச் அருகே உள்ள படைகளின் தளபதி. "இது எங்களது திட்டம். அது வெற்றிகரமாக அமைந்து விட்டது" - என்றும் அவர் அங்குள்ள ரொய்ட்டர் செய்தியாளரிடம் கூறியுள்ளார்.

குச் அருகே முன்னேறிய அமெரிக்கப் படைகளை ஈராக்கிய குடியரசு இராணுவத்தின் பக்தாத் படைப் பிரிவு தடுத்து நிறுத்தி சண்டையிட்டு வந்தது. அந்தப் பிரிவின் பெரிய தளமாகவும் அது இருந்தது.

"இன்றைய நடவடிக்கை மிகப் பெரியது. அங்கே இன்னும் டாங்கிச் சண்டை இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது" - என்று களத்தில் உள்ள அதிகாரி ஒருவர் சொன்னார்.

தற்போது அமெரிக்கப் படைகளின் கட்டுப்பாட்டில் வந்திருக்கும் குச் பிரதேசத்தில் இருந்து 105 மைல்கள் தூரத்திலேயே பக்தாத் இருக்கிறது. (ம)



ஈராக் தலைநகர் பக்தாத்தில் 14ஆவது நாளாக நேற்றும் கடும் விமானக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. தலைநகரை பாதுகாத்து நிற்கும் குடியரசுப் படைகளின் நிலைகள் மீதும் சரமாரியான தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பக்தாத்தில் நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னர் நகரில் இருந்து மேற்கிளம்பும் தீச்சுவாலையையும் பல நூறு அடி உயரம் எழும் புகைமண்டலத்தையும் படத்தில் காணலாம்.

# பக்தாத் நோக்கிய அமெரிக்காவின் தரைநகர்வுகள் மீண்டும் தீவிரம்!

ஈராக்கில் கடந்த சில நாள்களாக நிறுத்தப்பட்டிருந்த அமெரிக்கப் படைகளின் தரை நகர்வுகள் மீண்டும் முழு வேகத்துடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க டாங்கிகளும் படைப் பிரிவுகளும் பக்தாத் நோக்கி நகர ஆரம்பித்துள்ளன.

இதன் முதற்கட்டமாக பக்தாத்துக்கு தெற்கே 70 மைல் தொலைவிலுள்ள கர்பாலா என்ற ஈராக்கியர்களின் புனித நகரத்தைக் கைப்பற்ற அமெரிக்கப்படை முன்னேறி வருகின்றது. நள்ளிரவுக்கு மேல் இந்த நகர்வு ஆரம்பிக்கப்பட்டது. அப்பாச்சி ஹெலிகளும் போர் விமானங்களும் தொடர்ச்சியான குண்டுத் தாக்குதல்களை நடத்தி ஆதரவு வழங்க தரைப்படையினர் முன்னேறினர்.

இந்த நகரத்தில் அமெரிக்கப்படையினருக்கு கடும் எதிர்ப்பு இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. நகரின் எல்லையோர காவலை உடைத்துக் கொண்டு உள் நுழைய குறைந்தது ஒரு நாள் தேவைப்படும் என தாம் எண்ணியிருந்த போதும் அது மூன்று மணித்தியாலங்களில் சாத்தியமானதாக படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். நகரின் மையப்பகுதிக்குச் செல்லும் போது போர் தீவிரமடையலாம் என அமெரிக்க அதிகாரிகள் இப்போது எதிர்பார்க்கிறார்கள்.

அமெரிக்க இராணுவத்தின் இந்த நடவடிக்கை பக்தாத்தைக் கைப்பற்றுவதற்கான இறுதி நடவடிக்கையாக அமையலாம் என்று அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பென்ரகன் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, யுத்தநிறுத்தம் ஒன்றை மேற்கொள்வதற்கு அமெரிக்கா முயல்கின்றது என்ற கூற்றை பாதுகாப்புத்துறை அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் மறுத்துள்ளார். "சதாம் பற்றிய தகவல்கள் இல்லாததாலும் அண்மையில் அவர் தொலைக்காட்சியில் நேரடியாகத் தோன்றாததாலும் நிபந்தனையின்றி ஈராக்கியர்கள் தோல்வியை ஒப்புக்கொண்டால் இந்தப் போரை முடிவுக்கு கொண்டு வரலாம் என ரம்ஸ்பீல்ட் தெரிவித்தார்.

# ஈராக்கில் பலஸ்தீனர் தாக்குதலில் மரணம்!

பெய்ரூட்,ஏப்.3

அமெரிக்காவை எதிர்த்து வரும் ஈராக்கியப் படையினருக்கு ஆதரவு தெரிவித்து அங்கு சென்ற பலஸ்தீனர் ஒருவர் கூட்டுப் படையினரின் தாக்குதலில் உயிரிழந்தார்.

தார் ஹுசைன் ஒத்மன் என்ற பலஸ்தீனரே உயிரிழந்தவராவார். சிரியா எல்லையூடாக பக்தாத் நோக்கி இவர் சென்று கொண்டிருந்த பஸ் மீது அமெரிக்காவின் அபாச்சி ஹெலி நடத்திய தாக்குதலில் சிக்கி படுகாயமடைந்தார். பின்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

சிரியத் தலைநகர் பெய்ரூட்டில் செவ்வாயன்று அவரது இறுதிச் சடங்கு நடைபெற்றது. பெரும் எண்ணிக்கையான முஸ்லிம்கள் அதில் கலந்துகொண்டனர். இறுதி மரியாதையாக வான் நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. அவரது மறைவுக்கு துக்கம் அனுஷ்டித்து கடைகளும் மூடப்பட்டிருந்தன.

லெபனானில் உள்ள பலஸ்தீன அகதி முகாமில் பிறந்த ஒத்மன், 1987ஆம் ஆண்டில் டென்மார்க்கில் அரசியல் தஞ்சமடைந்தார்.

ஈராக் போர் ஆரம்பித்த அன்று அவர் சிரியாவில் இருந்து எல்லை தாண்டி பக்தாத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது தாக்குதலுக்கு இலக்கானார்.

"என் தம்பி சுற்றுலாப் பயணமாகவே சிரியாவுக்கு வந்திருந்தான். அவன் ஈராக் சென்றது பற்றி எமக்குத் தெரியாது" - என்றார் ஒத்மனின் சகோதரர். (ம)

# ஈராக் சென்று சண்டையிடுவதில் அரபு இளைஞர்கள் பலர் ஆர்வம்

ஜெருசலேம்,ஏப்.3

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்த ஆரம்பித்த பின்னர், ஈராக்கிய இராணுவத்துக்கு ஆதரவு தெரிவித்து அரபு நாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கானவர்கள் பக்தாத்துக்குச் சென்றுள்ளனர். இவர்களில் பலர் கூட்டுப் படைகளுக்கு எதிரான தற்கொலைத் தாக்குதல்களை நடத்துவதற்கும் தயாராக அங்கு சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பலஸ்தீனத்தில் இருந்து நூற்றுக்கணக்கான இளைஞர்கள் பக்தாத் சென்றுள்ளனர் என்று அதிகாரிகள் கூறினர். மேலும் மேலும் அவர்கள் சென்றுகொண்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். ஈராக்கிய மக்களுக்கு எதிரான அமெரிக்க - பிரிட்டிஷ் படையினரை எதிர்ப்பதே அவர்களின் குறிக்கோள் என்று கூறப்படுகின்றது.

1997இல் ஆரம்பிக்கப்பட்ட 'புகழ் பெற்ற இராணுவம்' என்ற இஸ்லாமிய அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஏராள மானவர்கள் ஏற்கனவே பக்தாத் போய்ச் சேர்ந்துள்ளனர். "ஈராக்கிய எல்லையோர நாடுகள் ஊடாக இவர்கள் பக்தாத்துக்குச் செல்கின்றனர்" - என்று பலஸ்தீன அதிகாரியான முனீர் மஹ்தா தெரிவித்தார்.

இதுவரை மற்றைய அரபு நாடுகளில் இருந்து 6ஆயிரம் பேர் ஈராக்கியர்களுக்கு உதவுவதற்காக தொண்டர்களாக பக்தாத்துக்கு வந்துள்ளதாக ஈராக்கிய துணை அதிபர் தாகா யஸீன் ரம்டான் சொன்னார்.

சுவீடன் மற்றும் டென்மார்க் நாடுகளில் உள்ள ஈராக்கியர்கள் தமது தாய் நாட்டுக்குத் திரும்பி சண்டையிட விரும்பினால் தம்மைத் தொடர்பு கொள்ளுமாறு அந்த நாடுகளில் உள்ள ஈராக்கிய தூதரக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஜேர்மன் தலைநகர் பேர்லினில் உள்ள ஈராக்கிய தூதரகம் சண்டையிடுவதற்காக பக்தாத் செல்ல விரும்பும் எகிப்தியர், லெபனானியர், பலஸ்தீனர்கள், மொறோக்கோ நாட்டவர்கள் ஆகியோருக்கு தாம் உடன் வீஸா வழங்குவதாக தெரிவிக்கிறது. (ம)



ஈராக்கின் தெற்கு நகரான அபு அல்-ஹாஷிப்பில் (பஸ்ராவுக்கு தெற்கே உள்ளது) கூட்டுப் படையினரின் தாக்குதலில் சிக்கி சிதிலமான ஈராக்கின் ரி-55 டாங்கியைத் தாண்டி கூட்டுப் படைகளின் 3ஆவது கொமாண்டோ பிரிவின் வாகனங்கள் செல்வதை மேலுள்ள படத்தில் காணலாம். பக்தாத்தை நெருங்கியுள்ள அமெரிக்கப் படைகளைத் தடுத்து நிறுத்தி சண்டையிட்டுவரும் ஈராக்கிய குடியரசுப் படையினர் தமது ஆயுதங்களை உயரே தூக்கிக் காட்டி அமெரிக்கப் படையினருக்கு எதிராகக் குரல் எழுப்பும் காட்சி அருகில் உள்ள படத்தில்.



# யாழ். மக்களின் மன உறுதி என்னை பிரமிக்க வைக்கிறது!

## இந்திய மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

அச்சுவேலி,ஏப்.3

யாழ்ப்பாண மக்களின் மன உறுதியைக் கண்டு பிரமிக்கிறேன் என்று கூறினார் சென்னையைச் சேர்ந்த இருதய சிகிச்சை நிபுணர் டாக்டர் ஸ்ரீனிவாசன் ரஞ்சன். யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் டாக்டர் உமாபதி ஸ்ரீசங்கர் தலைமையில் ரிஷிகாளான் மருத்துவ உப உணவு தொடர்பாக கருத்தரங்கு நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசிய தமிழ்நாடு அப்பலோ மருத்துவமனை மருத்துவ ஆலோசகர் டாக்டர் ஸ்ரீனிவாசன் ரஞ்சன் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

இந்தியாவில் இருந்து முதற்றடவையாக யாழ்ப்பாணம் வந்துள்ளேன். இங்கு நான் யாழ்ப்பாண மக்களின் மன உறுதியைக் கண்டு பிரமிப்பு அடைகின்றேன்.

யாழ்ப்பாணத்தில் நான் கண்ட சேதங்கள், அழிவுக் காட்சிகள் என்னைக் கவலைகொள்ளச் செய்துள்ளன. இத்தனை துன்பதுயரங்களின் மத்தியிலும் தளராத மன உறுதியுடன் வாழும் மக்களின் மன உறுதி என்னை பிரமிக்க வைக்கின்றது.

20வருட யுத்தத்தினால் அல்லல்பட்ட மக்களின் வாழ்வு எதிர்காலத்தில் சுபீட்சமடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

யாழ்ப்பாணத்தின் வைத்திய வசதிகளும் யுத்தத்தினால் பின் தள்ளப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. வைத்திய வசதிகள் இங்கு மேனிலை அடைய வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ஒ-11)

### பதவியுயர்வுப் பரீட்சை

பொது நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு வகுப்பு II 'ஆ' தரத்தில் உள்ளவர்களை 'அ' தரத்திற்கு உயர்த்துவதற்கான பரீட்சையை விரைவில் நடத்தவுள்ளது.

பொது எழுதுநர் சேவை, சிறாப்பர் சேவை, கணக்குப் பதியுநர் சேவை, பண்டகசாலை காப்பாளர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை, புகையிரத எழுதுநர் சேவை, அஞ்சல் எழுதுநர் சேவை, மருத்துவசாலை எழுதுநர் சேவை ஆகிய 8 பிரிவுகளைச் சார்ந்தவர்களுக்கே பதவி உயர்வுப் பரீட்சை நடத்தப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் ஊடாக எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் 'இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், இணைந்த சேவைகள் பிரிவு பொது நிர்வாக முகாமைத்துவம் மறுசீரமைப்பு அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு - 7' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-185)

### ஆன்மீக சொற்பொழிவு


நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு 'சைவ நெறி காட்டும் மனித விழுமியங்கள்' என்னும் விடயம் பற்றி யாழ்.கல்வி வலயத்தின் ஆசிரிய ஆலோசகர் திருமதி பா.பாலகிருஸ்ணன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (ஒ-ரி)

### தொழில்நுட்ப பயிற்சி வகுப்பு

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் உள்ளூர் ஆளுகை நிறுவனத்துடன் இணைந்து திட்டமிடல் தொழில்நுட்பம சம்பந்தமான பயிற்சி வகுப்பினை இன்றும் நாளையும் நடத்துகிறது.

மாவட்ட மட்டத்தில் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பவியலாளர்களுக்கான இப்பயிற்சி வகுப்புக்கு 40பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஒ-185)

## நல்லூர் சித்தர் செல்லப்பா சுவாமிகள்



நீர்வளம், நிலவளம் குன்றாத நல்ல ஊரான குமரன் உறையும் குறைவற்ற ஊராம் நல்லூரில், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த வல்லிபுரம் - பொன்னார் தம்பதிகளின் புதல்வராக வந்துதித்தார் செல்லப்பர். நல்லூர்ப் பெருமானின் வெளிவீதியோரமாக தென்கிழக்கில் இவரது வீடு உள்ளது. இங்கிருந்து கல்விகற்று ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவியை வகித்தார். எனினும், வெகு விரைவில் தனது பட்டம், பதவி அனைத்தையும் விட்டு விசர்க்கோலம் பூண்டார். அவரை யாவரும் 'விசர்ச் செல்லப்பர்' என அழைத்தனர். எனினும், அவரிடம் செல்லும் பக்தர்கள் முழுநம்பிக்கையுடன் அவரை வணங்கினார்கள். மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மனிடத்தும் மிகுந்த வாரப்பாடு உடையவர். அங்கு ஒவ்வொரு பங்குனித் திங்களும் தவறாது செல்வார்.

கொழும்புத்துறை யோகர் சுவாமிகளும் செல்லப்பரை தரிசிக்கச் சென்ற சமயம் 'ஆரடா நீ?' என அதட்டிக் கேட்டார். 'ஆரடா நீயென்று அதட்டினான் அன்றே யான் பெற்றேன் அருள்' என்கின்றார் யோகர் சுவாமிகள். ஒருமுறை யோகமுனிவர் கதிர்காம யாத்திரையாகச் சென்றபோது நீண்ட நாள்களாக யோகநாதனைக் காணாத உறவினர் செல்லப்பரிடம் சென்று விசாரிக்க "அவன் செத்து விட்டான்" எனக் கூறினார். சீடர் பின்னர் தேசியரிடம் வந்து நின்றபோது "எங்கேனும் வேர் விராயைப் பார்" என்று தேசிகர் மொழிந்தார். குருமொழியை பின்பற்றிய சீடர் கொழும்புத்துறை சென்று சந்தியில் இருந்த இலுப்பை மரத்தின் இருக்கை போன்ற வேரில் அமர்ந்து கொண்டார். அங்கும் குருவானவர் அடிக்கடி செல்வார். அப்போ "சீடர் கும்பிட எழுகையில் நீயென நானென வேறில்லை" எனக் கூறினார்.

ஒருநாள் இரவுவேளை தன்னுடன் துயிலவரும் அயலவரிடம் "இன்று இரவு இங்கு பெரிய புதினம் நடக்கும் நீ வருவாயோ?" எனக் கேட்டார். அன்று இரவு அன்பர் செல்லவில்லை. அடுத்தநாள் காலை சென்றபோது சிறுபிள்ளை போல ஒரு விரலை வாயில் வைத்தபடியும் காலொன்றை மடக்கி நடராச பாவத்தில் வைத்தவண்ணம் செல்லப்பவேடம் விறைத்துக் கிடந்தது. 1915ஆம் ஆண்டு பங்குனி அச்சுவினி செல்லப்பா சுவாமிகளின் சமாதி அடைந்த தினமாகும். 03.04.2003 அவரது குருபூசைத் தினமாகும்.

-தெய்வமாலினி செந்தில்குமரன்-

## தேரடிச் சித்தர்

அர்த்த சாமம் அடங்கிட அரவம்
நித்தம் ஆலய வீதியில் வருவார்
சுற்றியும் குதித்தும் தொடர்ந்தும் எழுந்தும்
பத்தியில் பாதி இராவரை சுற்றுவார்
ஆரும் அவரிடம் அணுகார் அஞ்சியே
சேரும் நல்வினை சேர்ந்த தோவென
ஆரெடா நீயென அதட்டி அஞ்சிட
சேரிடச் செய்தது சிவயோக சுவாமியை
ஓவா துணர்ந்த ஒரு பெரு யோகியை
தாவிலாத தகையோன் தத்துவ ஆதித்தன்
மூவவ ரு அறியொணா மாதவன் என்று தம்
நாவால் நவின்றவன் யோக சுவாமியே
போற்றுவம் நாமெல்லாம் பொன் திரு நாளாய்
சாற்றுவம் யார்க்குஞ் சஞ்சலம் தீர்ந்திட
பேற்றினில் ஒன்றெனப் பெரிதும்
ஏற்றுவம் இன்றிச் செல்லப்பர் நாமமே நெஞ்சினில்!

-பண்டிதர் சி.கா.சேந்தன்

(தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகளின் குருபூசை தினம் இன்று)




## சாயி சிந்தனை

### இல்லத்துக்கு ஆதாரம்

பெண்கள் இல்லாத இல்லம் வெறும் மடம் போல் காட்சியளிக்கும். சத்திரம் போலக் காணப்படும். ஆகவே, முதலில் பெண்கள், தாங்கள் தான் இல்லத்துக்கு ஆதாரம் எனப் புரிந்துகொள்ளவேண்டும். தனது குழந்தைகளை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். தனது கணவனின் நலத்தில் மிகுந்த அக்கறை கொள்ளவேண்டும். இதற்குப் பிறகு அவர் எந்த வேலை வேண்டுமானாலும் செய்யலாம். இது காலம காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் வாழ்க்கைமுறை.

ஆனால், இவை எல்லாம் தற்போது எதிரிடையாக மாறிப் போய் விட்டன. பெண்கள் தங்களை சமையலறைக்குள்ளேயே அடைத்துக் கொள்ள வேண்டுமெனச் சிலர் நினைக்கின்றனர். கிடையாது ஒரு பெண் தன் இல்லம் முழுவதையுமே விரும்புபவள்! பெண்கள் சரியாக இருந்தால் தான் குழந்தைகளும் நல்லபடியாக வளருவார்கள். ஆண் ஒரு பெண்ணைக் கண்ணீர் சிந்தும்படி நடத்தக் கூடாது. வீட்டிலிருந்து பெண் கண்ணீர் சிந்தினால் இல்லத்துச் செல்வம் எல்லாம் மறைந்து போய்விடும். ஆகவே, ஒரு பெண் கண்ணீர் சிந்தாமல் பார்த்துக் கொள்வது ஆணின் கடமை. ஆனால், இந்நாளைய ஆணுக்கு இந்த உண்மை புரிவதில்லை. தாங்களே உயர்ந்தவர்களென்ற எண்ணம் அவர்களுக்கு. புருஷன் என்ற பதத்துக்கு என்ன அர்த்தம்!" காற்சட்டையும், சேட்டும் போட்டுக் கொண்டால் அவர்கள் புருஷர்களாகி விடுவார்களா? இல்லை! தேகத்தினுள் சைதன்மாக விளங்கும் ஆத்ம தத்துவத்துக்கே புருஷா என்று பெயர். உள்ளிருக்கும் ஆத்ம தத்துவமே புருஷா. *(ஆதாரம்: சனாதன சாரதி)*





யாழ்.ஆஸ்பத்திரி கண் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு நவீன லேசர் இயந்திரம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

சமயச் சொற்பொழிவாளர் ஆறு. திருமுருகன் தனது லண்டன் விஜயத்தின்போது ஆற்றிய சொற்பொழிவுகள் மூலம் கிடைத்த பணத்தில் இக்கருவியை கண் சிகிச்சைப் பிரிவுக்கு வழங்கியுள்ளார். எட்டு லட்சத்து 40 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்த உபகரணம் லண்டன் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் உதவியுடன் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

நவீன லேசர் கருவியை மேல்படத்திலும், கண் வைத்திய நிபுணர் டாக்டர் ச.குகதாசன் அதனைப் பயன்படுத்தும் காட்சியை கீழ் படத்திலும் காணலாம். (ஐ)

# காணாமற் போனோர் குறித்து விசாரணை நடத்த குழு வருகை

யாழ்ப்பாணம்,ஏப்.3

குடாநாட்டில் 1996 - 1997 ஆம் ஆண்டு காலப் பகுதியில் காணாமற் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கென குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலீஸ் அத்தியட்சகர் நிஸாந்த பெரேரா தலைமையிலான விசாரணைக் குழுவினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இக்குழுவினர் இன்றும் நாளையும் யாழ்.பொலீஸ் நிலையத்திலும் -

நாளைமறுதினம் சாவகச்சேரி பொலீஸ் நிலையத்திலும் -

எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மானிப்பாய் பொலீஸ் நிலையத்திலும் -

விசாரணைகளை நடத்தவுள்ளனர்.

இவ்விசாரணைகளுக்கு சமுகமளிக்கும் முறைப்பாட்டுக்காரர்கள் பொலீஸ் முறைப்பாட்டுப் பிரதி, காணாமற்போனவரின் நிழற்படம் ஆகியவற்றைக் கொண்டுவருமாறும்-

முறைப்பாட்டுக்காரர்கள் அல்லது சாட்சிகள் வெளியிடங்களுக்குச் சென்றிருந்தால் அது தொடர்பாக விசாரணைக் குழுவுக்குத் தெரியப்படுத்துமாறும் -

விசாரணைக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

(ஒ-8)

### சுற்றுலா கைத்தொழில் அபிவிருத்தித் திட்டம்


யாழ்ப்பாணம்,ஏப்.3

வடக்கு - கிழக்கில் சுற்றுலா கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஆகவே, இது தொடர்பான விவரங்களை உடன் திரட்டித்தருமாறு வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சகல பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களையும் கேட்டுள்ளார். வடக்கு-கிழக்கில் உள்ள 72 உள்ளூராட்சி மன்றங்களில் சுற்றுலா கைத்தொழில் விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்கள் கண்டறியப்பட்டுள்ளன. (ஒ-185)

# உணவில் மூலிகை சேர்ப்பது நெடுங்காலம் வாழ உதவும்

முன் உண்ட உணவு செரித்ததா என்பதனை அறிந்து பின் உண்டால் அவ்வுடம்பிற்கு மருந்து என்று ஒன்று தேவையில்லை என்பது வள்ளுவர் வாக்கு. இதை நாம் தெளி




வாக அறிந்திருந்தும் கூட நாகரிகம் எனும் மாய வலையில் சிக்குண்டு தொடர்ந்தும் உடலுக்கு ஒவ்வாதவற்றை உண்டு நோய்களை நாமே வலிய அரவணைத்துத் துன்பமடைகிறோம். இதுவே யதார்த்தம்.

மூலிகைகளிலான வைத்திய முறையில் பல ஆராய்ச்சிகள் செய்து அதன் அரிய பல நன்மைகளை கண்டறிந்து அதில் வெளிநாட்டவர்கள் காட்டும் ஈடுபாடு, இவ்வைத்திய முறையை தொன்மையிலேயே அறிமுகம் செய்து அதில் வெற்றியும் கண்ட எமக்கு தற்போது இல்லாதது கவலையளிக்கும் விடயமாகும்.

முற்காலத்தில் ஒரு மனிதனின் ஆயுள்காலம் 100-120 வருடங்கள். இன்றோ அது 50-60 வருடங்கள் என ஆகிவிட்டது. சித்த மருத்துவத்தின் மூலம் பக்க விளைவுகள் எதுவும் இன்றி முழுமையாக நோய்களை குணப்படுத்தி விடலாம். எமக்குத் தேவையான மூலிகைகள் எமது உள்ளூர் பிரதேசங்களிலேயே கிடைக்கக் கூடியதாக உள்ளன. ஆனால், அதை அடையாளம் காண்பதே பெரும் பிரச்சினையாக உள்ளது. இதற்குத் தீர்வாக ஒவ்வொருவரும் உரிய புத்தகங்கள் வாயிலாகவோ அல்லது விஷயம் தெரிந்தவர்களிடம் கேட்டோ அறிந்து கொள்ளவேண்டும். எதுவும் எம்மை தேடி வருவதில்லை. நாமே நல்லதை நாடிச் செல்ல வேண்டும். ★

மருத்துவச்சித்தன்

உதயன்

# மக்களைக் குழப்பும் கருத்துகள்

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட படையினரின் குடும்பத்தவருக்கு உதவி வழங்கும் நிகழ்வு ஒன்று நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம் பெற்றது. அதில் உரையாற்றிய ஜனாதிபதி தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாக தமது கருத்துக்களை வெளியிட்டார்.

✪ யுத்தங்கள் அனைத்திற்கும் பேச்சு மூலமே தீர்வுகள் காணப்பட்டன. யுத்தம் மூலம் எதனையும் முடிவுக்குக் கொண்டுவர முடியாது.

✪ ஒன்றரை வருடங்களாக நடைபெறும் பேச்சுக்களை பார்த்துக்கொண்டிருக்கிறோம். இன்னும் அடிப்படை விடயங்கள் கூடப் பேசப்படவில்லை; பயனுள்ள முன்னேற்றம் ஏதும் காணப்படுவதாகத் தெரியவில்லை. இனப்பிரச்சினைக்கு என்ன வழியில் தீர்வுகாணப் போகிறோம் என்பது தொடர்பான தனது நிலைப்பாட்டை அரசு இன்னமும் மக்களுக்கு வெளிப்படுத்தவில்லை.

✪ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக நாம் ஏற்கவில்லை.

✪ சுதந்திரக்கட்சி அரசு ஆட்சிக்கு வந்தாலும் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் தொடரும்.

- இவை, மேற்படி நிகழ்வில் ஜனாதிபதி ஆற்றிய உரையில் தெரிவிக்கப்பட்ட முக்கிய கருத்துக்கள் ஆகும்.

இனப்பிரச்சினைக்கு அமைதிப் பேச்சு மூலம் சமாதானத் தீர்வு காண்போம் என்ற கோஷத்தை முன்வைத்துத்தான் ஜனாதிபதி குமாரதுங்க 1994 இல் முதல் தடவையாக ஆட்சியைப் பிடித்தார். ஆனால், பின்னர் தனது சுருதியை மாற்றிக்கொண்டு - 'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற புதிய பல்லவியைப் பாடிக்கொண்டு - தமிழர்களுக்கு எதிராக ஈவிரக்கமற்ற கொடூரமான யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டார். இப்போது மீண்டும் "யுத்தம் மூலம் தீர்வு காண முடியாது; யுத்தங்கள் அனைத்திற்கும் பேச்சு மூலமே தீர்வுகள் காணப்பட்டன" - என்ற பழைய கீர்த்தனைக்கு அவர் திரும்பியிருக்கிறார். இந்த அனுபவப் பாடத்தை அவர் கற்றுக்கொள்ள சுமார் 8, 9ஆண்டுகள் தேவைப்பட்டுள்ளன. பெருமளவு உயிர், உடைமை இழப்புக்களை நாடு காவு கொடுக்க வேண்டியிருந்தது.

எது, எப்படியென்றாலும் இராணுவத் தீர்விலும் ஒரு கண்ணை வைத்திருந்த நாட்டின் தலைவிக்கு பேச்சுமூலம் மட்டுமே தீர்வு என்பது உரிய முறையில் உணர்த்தப்பட்டிருப்பது தீர்வு முயற்சியைப் பொறுத்த வரையில் நல்ல சகுனமே.

தற்போதைய பேச்சுக்கள் பயன் தராமல் ஒன்றரை வருடமாக நீடிப்பதாகவும் விசனம் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி.

அவரது அரசு புலிகளோடு நடத்திய பேச்சு மூன்று மாதத்தில் குழம்பிப்போனது. அவரது அரசிற்கும் புலிகளுக்குமிடையில் பரஸ்பரம் நம்பிக்கை ஏற்படாததும் இரு தரப்புக்கும் இடையிலான சந்தேகமுமே அதற்கு முக்கிய காரணம் என்பதை சுட்டிக் காட்டியிருக்கின்றார் அமைச்சர் பீரிஸ்.

இன்றைய நிலைமை வேறு. ரணிலின் அரசு மீது புலிகள் பெரும் நம்பிக்கை வைத்துள்ளனர். அதேபோன்று புலிகள் மீது அரசும் நம்பிக்கை வைத்துள்ளது. இந்தப் பரஸ்பர நம்பிக்கையைக் கட்டி வளர்த்ததே பேச்சுக்களில் முதல் வெற்றி என்கிறார் ஜி.எல்.பீரிஸ்.

அதுமட்டுமல்ல தீர்வுக்கான அடிப்படைக் கட்டமைப்பு எது என்பதை இரு தரப்பும் இணைந்து ஆராய்ந்து இணக்கங்கண்டு பிரகடனப்படுத்தியுள்ளன.

எனவே, ஒன்றரை வருட காலப்பேச்சில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது; பரஸ்பர நம்பிக்கை கட்டி வளர்க்கப்பட்டுள்ளது; தீர்வுக்கான அடிப்படை தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

ஆகையால் தற்போதைய பேச்சுக்கள் தொடர்பாக ஜனாதிபதி தெரிவித்த அதிருப்தி அர்த்தமற்றது என்பது தெட்டத் தெளிவாகப் புலப்படுகின்றது.

புலிகளைத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்று ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்றும் ஜனாதிபதி கூறுகின்றார். அது அவரது கருத்து. ஆனால் அந்தக் கருத்தை பகிரங்கமாக வெளியிடும் ஜனாதிபதி தமது கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சமாதானப் பேச்சுக்கள் தொடரும் என்கிறார்.

புலிகளைத் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்காமல் - பத்தோடு பதினொராவது தரப்பாக புலிகளைக் கருதிக்கொண்டு - ஜனாதிபதி குமாரதுங்கவின் 'உத்தேச' அரசு யாரோடு பேசப்போகின்றது? அத்தகைய பேச்சு சாத்தியமானதா? மீண்டும் பல தரப்புக்களையும் அழைத்து வைத்துக்கொண்டு சமாதான நடவடிக்கைகள் என்ற பெயரில் வட்ட மேசை மாநாடு, சர்வ கட்சி மாநாடு என்று கூட்டம் போடப்போகின்றதா?

எனவே, இத்தகைய குழப்பமான கருத்துக்களை வெளியிட்டு நாட்டையும், மக்களையும், தற்போதைய சமாதான முயற்சிகளையும் குழப்பாமல் அமைதி பேணுவதே ஜனாதிபதிக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது; மக்களுக்கும் நல்லது.

# குழந்தையிடம் நைசாகப் பேசி சங்கிலியை அபகரிக்க முயற்சி!

## யாழ்.ஆஸ்பத்திரியில் யுவதி சிக்கினார்

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்.போதனா வைத்தியசாலைக்கு தாயாருடன் வந்த குழந்தையை, நைசாகப் பேசி அழைத்துச் சென்ற யுவதி ஒருவர் குழந்தை அணிந்திருந்த சங்கிலியை அபகரிக்க முயன்றபோது அகப்பட்டுக்கொண்டார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த திருமதி உ.நந்தினி என்பவர் தனது 2 வயதான குழந்தையுடன் சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தார். சிகிச்சையின் பின்னர் மருந்து வாங்கும்போது அவரது கவனம் குழந்தையிடமிருந்து சற்று விலகியது. அந்தச் சமயம் பார்த்து யுவதி ஒருவர் குழந்தையை அணுகி நைசாகப் பேசி மறைவிடத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கு வைத்து குழந்தையின் கழுத்திலிருந்த சங்கிலியை கழற்ற முற்பட்டுள்ளார்.

இதேவேளையில் குழந்தையைக் காணாது தேடிய தாயார் யுவதியின் செயலைக் கண்டார். இதனையடுத்து தாய்க்கும் குறிப்பிட்ட யுவதிக்குமிடையே கைகலப்பு இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், யாழ்.ஆஸ்பத்திரி பாதுகாப்பு ஊழியர்கள் அவ்விடத்துக்கு விரைந்து சம்பந்தப்பட்ட யுவதியை மடக்கி யாழ்.பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இதுபோன்ற திருட்டுச் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளமையினால் பொதுமக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு யாழ்.பொலீஸ் நிலைய குற்றத்தடுப்புப் பொறுப்பதிகாரி எஸ்.பி.பிரேமரத்ன கேட்டுள்ளார். (ஒ-9)

# நாட்டு நடப்பு

**செத்தான் ஒரு தமிழன்**

நவாலியூர் நாகலிங்கனார்
நல்லூரில் காலமானார்
சிவா லண்டன் சிவாஜினி ஜேர்மனி
சுகந்தன் சுவிஸ் பிரேமா பரிஸ்
அவரது அன்புசால் பத்தினியோ
ஆஸ்திரேலியா பிரஜையானாள்
இவரது கொள்ளிக் குடத்தை
இளையண்ணை காவிச்சென்றார்
சிவப்பிரகாசமே சிதைக்கு தீ மூட்டினார்
சின்னத்தங்கத்தை ஒப்பாரிக்கு பிடித்தோம்
இவற்றின் விவரத்தை
"இன்ரநெற்றில்" காண்க
இவரின் மறைவு அவிட்ட பஞ்சமி
சாம்பல் உடன் அள்ள "சம்திங்" அனுப்பு.

*தகவல்*
*அயலவர்*
*அப்புக்குட்டி*

- விகடகவி.

## முன்னாள் தலைவர்களால்.

# பிரதேச சபைகளின் 9 வாகனங்கள் இன்னமும் மீளளிக்கப்படவில்லை

## பொலீஸில் முறையிட்டும் பயனில்லையாம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகங்கள் அச்சபைகளின் செயலர்களிடம் ஒப்படைக்கப்பட்டபோதும், ஒன்பது சபைகளின் முன்னாள் தலைவர்கள் தமது அலுவலக வாகனங்களை இன்னமும் கையளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் காலாவதியானதை அடுத்து அச்சபைகளின் நிர்வாகம் அச்சபைகளின் செயலாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனினும், அந்தச் சபைகளில் மூன்று சபைகளின் முன்னாள் தலைவர்கள் மட்டும் தாம் பயன்படுத்திய வாகனங்களை நிர்வாகத்திடம் கையளித்துள்ளனர் என்றும் -

ஏனைய 9 சபைகளின் தலைவர் பதவி வகித்தவர்கள் தாம் பயன்படுத்திய வாகனங்களை இன்னமும் கையளிக்கவில்லை என்றும் - உள்ளூராட்சி திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

வாகனங்களை ஒப்படைக்காத சபைகளின் முன்னாள் தலைவர்களுக்கு எதிராக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் -

அந்த வாகனங்களை மீளப்பெற்று சபைகளில் கையளிக்க இதுவரை பொலீஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் - அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்த விடயம் மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கு, மேலதிக நடவடிக்கைக்காக தெரியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு புனர்வாழ்வு அதிகார சபை பிரதேச சபைகளுக்கு வழங்கிய 6 வாகனங்களில் மூன்று வாகனங்கள் மீளப்பெறப் பட்டுள்ளன என்றும் -

ஒரு வாகனம் நீதிமன்றப் பாதுகாப்பில் உள்ளது என்றும் -

வேலணை, நெடுந்தீவு பிரதேச சபைகளின் தலைவர்களின் வாகனங்கள் இன்னமும் மீள ஒப்படைக்கப்படவில்லை என்றும் - கூறப்பட்டது.

உள்ளூராட்சி அமைச்சால் பிரதேச சபைகளுக்கு வழங்கப் பட்ட 7 வாகனங்களையும் அந்த சபைகளின் முன்னாள் தலைவர்கள் இன்னமும் கையளிக்கவில்லை என்றும் - கூறப்பட்டது.

## மீண்டும் யுத்தம் ஆரம்பிக்க இடமளியாது

# சமாதானம் நிலைக்க வேண்டுமென்பதில் விடுதலைப்புலிகள் உறுதியாக உள்ளனர்!

## சிரேஷ்ட தளபதி ரமேஷ் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஏப்.3

மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பிக்க இடமளியாது சமாதானச் சூழ்நிலை நிலைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம் என்று விடுதலைப் புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட சிரேஷ்ட தளபதி ரமேஷ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு மின் விநியோகத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொள்வதற்காக அங்கு சென்ற மூன்று அமைச்சர்களை வரவேற்கும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர்களான கருஜெயசூரிய, காமினி லொக்குகே, தயாரத்ன ஆகியோரை வரவேற்ற விடுதலைப் புலிகளின் போராளிகள், 'தேனகம்' விடுதியில் அவர்களுக்கு வரவேற்பு அளித்தனர்.

அங்கு ரமேஷ் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

இரு தசாப்த காலமாக யுத்தத்தால் இந்தப் பிரதேசம் பெரும் அழிவுகளைச் சந்தித்து வந்துள்ளது. சமாதான சூழ்நிலை ஏற்பட்ட பின்னர் மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படுவது, பொருளாதாரத் துறையில் மீண்டும் இப்பிரதேசத்தை கட்டி எழுப்ப வாய்ப்பாக உள்ளது.

யுத்தம் மூலம் எமது பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது என்பதை உணர்ந்து, சமாதானத்தில் உறுதியாக இருக்கின்றோம்.

நாம் இராணுவ ரீதியில் பலமான தமிழர் படையாக இருக்கின்ற படியால், சமபலத்துடன் பேச்சுக்கு வந்துள்ளோம். சமாதானத்தில் அக்கறை கொண்டு எமது தலைவர் பிரபாகரன் பேச்சுக்களுக்கு வந்துள்ளார். இதற்காக எமது தலைவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் - என்றார்.

அமைச்சர் கருஜெயசூரியா பேசுகையில் கூறியதாவது:-

இலங்கை சுதந்திரம் அடைய முன்னர் பிறந்தேன். அப்போது பொருளாதாரத்தில் ஆசியாவின் 2ஆவது நாடாகவும், சிறந்த போக்குவரத்துச் சேவையில் முதலாவது நாடாகவும் இலங்கை விளங்கியது. ஆனால், யுத்தம் காரணமாக இவ்விரு துறைகளும் பின்னடைவைச் சந்தித்தன. யுத்தம் நாட்டையே அழித்துவிட்டது.

இன்று உருவாகியுள்ள சமாதான முயற்சிகள் மீண்டும் நாட்டைக் கட்டியெழுப்ப நல்ல சந்தர்ப்பமாக அமைகிறது. இந்த நிலையை உருவாக்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அளிக்கும் பங்களிப்பையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம்- என்றார்.

(ஒ-3)

**நாளை**

பங்குனி 21
வெள்ளிக்கிழமை
(04.04.2003)
திதி: திருதியை
முழுவதும்
நட்சத்திரம: பரணி
முழுவதும்
சுபநேரம் : 6.10 - 7.40
ராகுகாலம் : 10.40 - 12.10
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

விரும்பியது கிடைக்கவில்லை என்று கவலைப்படுவதைவிட கிடைப்பதை விரும்ப முயற்சிப்பது மேல்.

## புதிய முகாம் அமைக்க

# மீனாட்சிபுரம் பகுதியையும் கையகப்படுத்த முயற்சியா?

## மக்கள் மத்தியில் சந்தேகம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்.கொட்டடி - நாவாந்துறைப் பிரதேசத்திலுள்ள 'மீனாட்சிபுரம்' பகுதியை முகாம் அமைப்பதற்கென கையகப்படுத்தும் நடவடிக்கையில் சீருடையினர் ஈடுபடக்கூடும் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. அப்பகுதி வரைபடங்களை அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து பெற்றுக்கொண்டுள்ளதே இச்சந்தேகம் எழக் காரணமாகவுள்ளது.

இடம்பெயர்ந்துள்ள சுமார் 50 குடும்பங்களை மீனாட்சிபுரம் பகுதியில் மீள்குடியமர்த்த அவர்களுக்கு இருப்பிடங்கள் அமைத்துக் கொடுக்கும் பணியை 'கியுடெக்' அமைப்பு தற்போது மேற்கொண்டு வருகிறது. இந்த இருப்பிடங்கள் ஒவ்வொன்றும் தலா 32 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், யாழ்நகரின் கரையோரப் பிரதேசத்தில் படையினர் அமைக்கவுள்ள முகாமுக்காக மீனாட்சிபுரம் பகுதியும் கையகப்படுத்தப்படலாம் என அஞ்சப்படுகிறது. (ஒ)

# தொழில் விருத்தி தொடர்பான கற்கை நெறிக் கருத்தரங்கு

தென்மராட்சி,ஏப்.3

யாழ்.மாவட்ட படித்த இளைஞர், யுவதிகளுக்கான முகாமைத்துவம் மற்றும் தொழில் விருத்தி தொடர்பான தொழில் முயற்சி கற்கைநெறிக் கருத்தரங்கு விரைவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இக்கற்கைநெறியில் கலந்து கொள்ள விரும்பும் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்களுக்கான செய்முறை முன்னோடிப் பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் ஆறாம் திகதி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நடைபெறும்.

யாழ்.பல்கலைக்கழகம், கைத்தொழில் அபிவிருத்திச்சபை, ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், வடக்கு-கிழக்கு மாகாண கைத்தொழில் திணைக்களம், ஸ்ரீலங்கா - ஜேர்மனி நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றின் விரிவுரையாளர்கள் இக்கருத்தரங்கில் உரையாற்றவுள்ளனர்.

தென்மராட்சி ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய கைத்தொழில் அபிவிருத்திச சங்க ஆதரவுடன் நடைபெறவுள்ள இந்த முன்னோடிப் பயிற்சிக் கருத்தரங்கில் புதிதாக தொழில்களை ஆரம்பிக்கவுள்ளோரும் கலந்துகொள்ளலாமென சங்கத் தலைவர் விமலாஸ் சி.கா. நவரத்தினம் தெரிவித்தார்.

சாவகச்சேரியில் நடைபெறும் பயிற்சிக் கருத்தரங்கில் கலந்து கொளவோர் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர் எனவும் தெரிவித்தார். (ஐ-117)

# குடாநாட்டில் பிடிபடும் கடலுணவு கடந்த வருடத்தில் அதிகரிப்பு!

## சமாதானச் சூழ்நிலை காரணம்

யாழ்.குடாநாட்டில் கடந்த 1990 ஆம் ஆண்டின் பின்னர் கடந்த ஆண்டிலேயே அதிக அளவிலான கடலுணவுகள் பிடிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கடற்றொழில் திணைக்கள பதிவுகளி லிருந்து அறியமுடிகிறது.

90 ஆம் ஆண்டுவரையும் 20 ஆயிரம் மெற்றிக் தொன்னுக்கு அதிகமாகப் பிடிக்கப்பட்டுவந்த கடலுணவுகள் 1991ஆம் ஆண்டு கடல் வலயத் தடைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதையடுத்து மிகவும் வீழ்ச்சியடைந்தன. அதனைத் தொடர்ந்து 1995 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்வின் போது இந்நிலை மேலும் மோசமடைந்தது.

ஆனால், கடந்த ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் தற்பொழுது அதிகளவில் கடலுணவு வகைகள் பிடிக்கப்படுகின்றன.

கடந்த 1991ஆம் ஆண்டிலிருந்து 2002ஆம் ஆண்டு வரையும் பிடிக்கப்பட்ட கடலுணவுகளின் அளவு வருட ரீதியாக வருமாறு:-

1991 - ஆயிரத்து 191 மெ.தொன்,
1992 - ஆயிரத்து 327 மெ.தொன்,
1993 - ஆயிரத்து 514 மெ.தொன்,
1994 - 3ஆயிரத்து 112 மெ.தொன்,
1995 - 2ஆயிரத்து 263 மெ.தொன்,
1996 - ஆயிரத்து 540 மெ.தொன்,
1997 - 2ஆயிரத்து 762 மெ.தொன்,
1998 - 2ஆயிரத்து 420 மெ.தொன்,
1999 - 3ஆயிரத்து 232 மெ.தொன்,
2000 - 2ஆயிரத்து 211 மெ.தொன்,
2001 - 2ஆயிரத்து 676 மெ.தொன்,
2002 - 3ஆயிரத்து 760 மெ.தொன்.

(ஒ-10-5)


வெளிவந்துவிட்டது!

தரம் - 10 இற்கான

வணிகக்கல்வியும் கணக்கீடும்

G.C.E. O/L பரீட்சைக்குரிய பயிற்சி வினாக்களும் விடைகளும் அடங்கியது.

ஆசிரியர்:
தம்பித்துரை பாலகிருஷ்ணன்
(யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

வெளியீடு: பூபாலசிங்கம் புத்தகசாலை
சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

(16253)


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 08 - 04 - 1933



உதிர்வு 05 - 03 - 2003

அமரர்

### சேனாபதி பரமகுரு (அமுதாப்பா)

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி அறிந்து விரைந்து வந்து உதவி செய்த அனைவருக்கும் மற்றும் தொலைபேசி, தபால், தந்தி மூலம் ஆறுதல் வார்த்தை கூறிய வெளிநாட்டு, உள்நாட்டு உறவினர், நண்பர்களுக்கும் இறுதி யாத்திரையில் கலந்துகொண்டு பல வகைகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், நாளை (04.04.2003) வெள்ளிக்கிழமை அதிகாலை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் நினைவுகள் எம்மை விட்டு ஒருபோதும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய வல்லை வைத்தீஸ்வரப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி - சறோஜினிதேவி
மகள் - கோ.கவிதா
மருமகன் - ஸ்ரீ.கோணநாயகம்

திருவில் வீதி,
வல்வெட்டித்துறை. (16225)

## அலுவலகம் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம்,ஏப்.3

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் (ஜிரிசற்) யாழ். புனர்நிர்மாண திட்ட நிறுவனத்தின் அலுவலகம் புதிய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

இலக்கம் 472, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தற்போது இந்த நிறுவனத்தின் அலுவலகம் இயங்கி வருவதாக அதன் பிரதம இணைப்பாளர் ஞா.றொ.இராசசிங்கம் அறிவித்துள்ளார். (ஐ-6)

## லயன்ஸ் கழகத்தின் உதவிநடவடிக்கை

தென்மராட்சி,ஏப்.3

சாவகச்சேரிப் பகுதியில் மீளக் குடியமர்ந்துள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு கொழும்பு மத்தி லயன்ஸ் கழகத்தினர் சாவகச்சேரி லயன்ஸ் கழக அனுசரணையுடன் உணவுப் பண்டம் அல்லாத பொருள்களை வழங்கவுள்ளனர்.

மானிப்பாய் பரிஸ் லயன்ஸ்கழக ஏற்பாட்டில் நாளை மறுதினம் சனிக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இப்பொருள்கள வழங்கப் படவுள்ளன.

உடுபுடைவைகள், பாடசாலை மாணவருக்கான உபகரணங்கள், பிளாஸ்ரிக் வாளிகள், குடைகள் உட்பட பல பொருள்கள் வழங்கவுள்ளதாக சாவ கச்சேரி லயன்ஸ் கழகச் செயலாளர் லயன் கா.சற்குணதேவன் தெரிவித்தார். (ஒ-117)

## முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம்,ஏப்.3

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றத்தின் ஏற்பாட்டிலான முத்தமிழ் விழா நேற்று ஆரம்பமானது.

இரண்டாவது நாளாக இன்று மாலை 7மணிக்கு கலாசாலை திறந்த வெளிக் கலையரங்குகளில் நிகழ்ச்சிகள் பொ.சிவானந்தராசா தலைமையில் ஆரம்பமாகும்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தரும், சிரேஷ்ட புவியியற்றுறைப் பேராசிரியருமான கலாநிதி பொ.பாலசுந்தரம் பிள்ளை பிரதம விருந்தினராகவும், கோப்பாய் ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபரும் இளைப்பாறிய பிரதி கல்விப் பணிப்பாளருமான திருமதி சிவா இராமநாதன், தமிழீழ கல்விக் கழக துணைப் பொறுப்பாளர் க.அருண் மாஸ்ரர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி ஆசியுரையும், முத்தமிழ் மன்ற காப்பாளர் திருமதி ப.இரத்தினவேல் வாழ்த்துரையும் வழங்குவர்.

இன்று நாடகம், நடனம், மெல்லிசை, இசை விருந்து, நாட்டுக் கூத்து, நிருத்திய நாடகம், கிராமிய நடனம், கர்நாடக இசை போன்ற பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (ஐ-6)

## சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை

யாழ்ப்பாணம்,ஏப்.3

பருத்தித்துறைக் கடற் பிராந்தியத்தில் கண்டெடுக்கப்பட்டதாக தெரிவித்து வல்வெட்டித்துறைப் பொலீஸாரால் யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்ட இனம் தெரியாத சடலம் 5 நாள்களாகியும் எவரும் உரிமை கோரப்படாத நிலையில் தொடர்ந்து சவச்சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. இச்சடலம் கடந்த மாதம் 28ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-15)


தேவை

மில் வேலை தெரிந்த வேலையாள்கள் தேவை.

பாலன் மில்ஸ்
மாவடிச் சந்தி,
வட்டுக்கோட்டை. (16233)

விற்பனைக்கு

பம்பாய் வெங்காய விதை, இந்தியாவிலிருந்து வந்த வாசகி விதை, வெண்டி விதை சில்லறை, மொத்த விலைக்கு விற்கப்படும்.

சிவசம்பு களஞ்சியம்
மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம். (C-27083)


# சான்று பகர்ந்திடு

எந்தவொரு விடயத்தினையும் ஆதாரப்படுத்த சான்றுகள் தேவை. அதற்கேற்பவே கடவுள் தன்னுடைய மகன் கிறிஸ்துவை வெளிப்படுத்துவதற்கு சான்றாக பின்வரும் வார்த்தை அமைகின்றது. "இவரே என் அன்பார்ந்த மகன் இவரில் நான் பூரிப்

**தவக்காலச்சிந்தனை -30ஆம் நாள்-**

படைகின்றேன்" என்பதே அந்த வார்த்தையாகும். இத்தகைய தன்மைக்கு ஏற்ப கிறிஸ்து தந்தையின் சித்தத்திற்கு ஏற்பவே இவ்வுலகில் தான் வாழ்ந்த காலத்தில் செயற்பட்டார். அதையே பிறரிடத்திலும் வாழ்வாக்கினார். இவை அனைத்தின பிரதிபலனாகவே அவரது உயிர்ப்பு காணப்பட்டது. உயிர்த்த கிறிஸ்துவை முழுமையாக ஏற்றுக்கொண்டு தம் வாழ்வாலும், கடவுளின் வார்த்தையாலும் சான்று பகர்ந்தோர் திருத்தூர்கும், ஆதித்திருச் சபையுமே ஆகும். இவர்களின் இத்தகைய பண்பின் வெளிப்பாடாக உலகெங்கும் கிறிஸ்தவம் ஒளிவீசியது.

அறிவியல் உலகிலும், கணனியுகத்திலும் திருமுழுக்கின் ஊடாக கிறிஸ்தவ வாழ்வு வாழ அழைக்கப்பட்டுள்ள எம்மட்டில் சான்று பகர்ந்திடும் வாழ்வு எத்தகையதாக அமைய வேண்டுமெனின் உண்மைக்கு எம் வாழ்வு உறைவிடமாய் உறவுகளை அரவணைத்து வழிகாட்டும் எண்ணமும், உள்ளதை இல்லார்க்கு அளித்திடும் உவகையும், தன்னலம் துறந்த பிறர்நல வாழ்வும், நன்மையுடன் நீதியும் அன்பின் நிறைவாழ்வும் அர்ப்பணிப்பு வாழ்வில் அகமகிழ்ந்திடும் உள்ளமும், தன் குற்றம் தான் உணர்ந்து வருந்தும் உள்ளமும் பிறர்க்குற்றம் மன்னிக்கும் சகோதர மனப்பாங்கு உருவாகும் இடத்து சான்று பகர்ந்திடும் வாழ்வு சிறப்புற்றுக் காணப்படும்.

**யே.அகுஸ்டதாஸ்**


ஜெனரேட்டர்கள்

உங்களது மின்சாரப் பிரச்சினையைத் தீர்க்க ஹொண்டா (HONDA) ஜெனரேட்டர்கள்.

650w, 1000w, 1200w, 1600w, 2600w

வீடுகள், காரியாலயங்கள், ரெஸ்ரூரண்டுகள், கடைகள், மண்டபங்கள், டிஸ்பென்சரிகள், தோட்ட பங்களாக்கள்..... இன்னும் பல

கையிருப்பு சொற்பமே

உடனடி விற்பனைக்கு உண்டு.

GENERAL EQUIPMENTS LTD
316, 400, Sri Sangaraja Mawatha, Colombo -12
Tel: 345046, 327264, 343822, 430799, Fax: 434637

(C/27073)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 25 - 06 - 1928



மறைவு 04 - 03 - 2003

அமரர்

### சின்னத்துரை இராசையா

இணுவில் மஞ்சத்தடி வேல்முருகன் சூழல்
ஏற்றமிகு குடியுதித்த செம்மல் வாழ்வின்
கணமெல்லாம் கடுமுழைப்பால் உயர்ந்தோன், தந்தை
கஷன் சின்னத்துரை அன்னை சின்னமோனை
மணியான தலைப்பிள்ளை, சோதரியர்
வளவாழ்வு பெறுவித்து மகிழ்ந்த பின்பே
மணவாழ்விற் புகுந்தஒரு கடமை வீரன்
மனமார்ந்த பெற்றோர் தம் வாழ்த்தைப் பெற்றோன்.

மனைவாழ்வில் புகுந்ததன்பின் வந்துதித்த
மக்கள்நல் வாழ்வுக்காய் முழுதாய்த் தன்னைக்
கனிவோடு கரைத்திட்டான்! ஊர்வம்புக்குள்
கணமேனும் நனையாத ஞானி நொச்சித்
தனிவேலன் தாளினையே கடைசி மட்டும்
சரணாக வாழ்ந்திட்டோர் அமர ரானான!

குலம் வாழக் குடிவாழ உழைத்த அந்தக்
கொள்கைவழி வாழ்ந்திடுவோம் கோவே என்று
புலங்கனிந்து வாக்குரைத்து நாளும் ஏத்திப்
பூத்தூவி வழிபடுவோம் அவரின் கால்கள்!

இன்று (03.04.2003) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'கலாபவனம்'
மஞ்சத்தடி தெற்கு,
இணுவில். (16203)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்.

# யாழ்.நகர மக்கள் சுதந்திரமாக நடமாட புதிய படை முகாம் தடையாக அமையும்

**யாழ்.** மாநகரசபை வளாகப் பகுதியில் புதிதாகப் பாரிய இராணுவ முகாம் ஒன்றை அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் துரிதகதியில் இடம்பெற்று வருவது குறித்து நகரை அண்டிய பகுதியிலும் கரையோரப் பகுதியிலும் வசிக்கும் மக்கள் மத்தியில் அச்ச நிலை தோன்றியுள்ளது.

நகரில் மிகவும் நெருக்கமாக மக்கள் வசிக்கும் பகுதியை அண்டிய இடத்தில் இந்த இராணுவ முகாம் அமைக்கப்படுவது மக்கள் மத்தியில் பல கேள்விகளை எழுப்பியிருக்கின்றன.

**செய்திக்கட்டுரை**

பாடசாலைகள், பொதுநூலகம், இந்துக் கோயில், கிறிஸ்தவ தேவாலயம், விளையாட்டு அரங்கு, சிறுவர் பூங்கா, திறந்தவெளி அரங்கு, கூட்டுறவு நிறுவனங்கள் போன்றவற்றிற்கு மத்தியில் இந்த இராணுவ முகாமை நிறுவும் பூர்வாங்க வேலைகள் கடந்த சில தினங்களாக முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொடூர யுத்தத்தினால் அழிந்து கிடக்கின்ற மாநகரசபைக் கட்டடத்தின் இடிபாடுகளை புல்டோசர் மூலம் அகற்றி அந்தப் பகுதியை துப்புரவு செய்யும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுவருகின்றனர்.

தற்போது இந்தப்பகுதியில் முட்கம்பி மூலம் பாதுகாப்பு வேலியும் அமைக்கப்படுகிறது.


யாழ்நகரின் மையப்பகுதியில் கரையோரப் பகுதியை உள்ளடக்கி இந்த இராணுவமுகாம் அமைக்கப்படுவதால், கரையோரப் பகுதி மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்குப் பாதிப்பு ஏற்படலாம் என்று மீனவர்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இராணுவமுகாம் அமைக்கப்பட்டதும் இந்தப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்படலாம் என்றும் இதனால், கரையோரப் பகுதி மீன்பிடி நடவடிக்கைக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

முகாம் அமைக்கப்பட்டதும் பாதுகாப்புக் கருதி மக்கள் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்று வாழ வேண்டிய நிலை ஏற்படலாம் என்றும் மக்கள் மத்தியில் எதிர்பார்ப்பு நிலவுகிறது.

யுத்தநிறுத்தம் மற்றும் சமாதான காலப்பகுதியில் இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் இந்த நடவடிக்கையை உடனடியாக கைவிட வேண்டும் என்றும் முகாம் அமைக்கும் முயற்சியைத் தடுத்து நிறுத்துவதற்கு சகல தரப்பினரும் ஒருமித்த குரல் எழுப்ப வேண்டும் என்றும் நகர மக்கள் கோருகின்றனர்.

சமாதான சூழ்நிலை ஏற்பட்ட பிறகு யாழ்.நகரின் மையப் பிரதேசத்தில் கலகலப்பு ஏற்பட்டு வருகின்றது.




துரையப்பா ஸ்ரேடியம் மற்றும் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானம் போன்றவற்றில் பல்வேறு நிகழ்வுகள் நாளாந்தம் நடைபெற்று வருகின்றன. பொழுதுபோக்குவதற்காக பெருமளவு மக்கள் அங்கு வருகின்றனர்.

கெடுபிடிகள், நெரிசல்கள் அற்ற இந்தப் பிரதேசம் மாலை வேளைகளில் மனதுக்கு ரம்மியம் தருகின்ற இடமாக மாறிவருவதைக் காணமுடிகிறது.

இப்படிப்பட்ட ஒரு பிரதேசத்தில் அதுவும் இராணுவத்தினரை குடியமர்த்தும் பொருட்டு ஒரு பாரிய படைதளத்தை அமைக்க முயற்சிப்பது சகலருக்கும் ஏமாற்றமளிப்பதாக உள்ளது. போர்நிறுத்த உடன்படிக்கையை அப்பட்டமாக மீறும் ஒரு நடவடிக்கையாகவும் உள்ளது.

யுத்தத்தினால் அழிந்து தரைமட்டமாகக் கிடக்கும் மாநகரசபைக் கட்டடத்தை மீண்டும் அதேஇடத்தில் மீளக் கட்டி எழுப்ப எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால், அந்த இடத்தில் படைத்தளம் ஒன்றை அமைப்பதற்கு அரசு முயற்சிப்பது மாநகர பகுதி மக்களை ஏமாற்றும் ஒரு செயலாகவே கருதப்படுகிறது.

**பா.நந்தகுமார்**
அரியாலை செய்தியாளர்

படையினரின் இந்த முயற்சியை சகல தரப்பினரும் தலையிட்டு நிறுத்துவதே சிறந்த வழி. இல்லையேல் இப்பகுதி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படுவதோடு, முகாம் அமைத்து இந்தப் பகுதி அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டால் பொதுமக்களின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்படலாம். அத்துடன் கரையோரப் பகுதி மீனவர்களின் தொழிலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படலாம். இந்தப் பகுதியில் மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத சூழ்நிலையும் ஏற்படலாம். ☆

# முதலாம் உலகப் போரின் போது ஈராக்கில் இந்தியத் தமிழர்கள் போரில் ஈடுபட்டனர்

சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்னர் இப்போதைய தமிழ் நாட்டைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் பலர் ஈராக்கிற்குச் சென்று போரிட்டிருக்கிறார்கள். அவர்கள் ஈராக்கின் பக்தாத் நகரை பிரிட்டிஷ் படைகள் பிடிப்பதில் உரிய பங்காற்றியிருக்கிறார்கள். இது பலருக்கும் தெரிந்திருக்க நியாயமில்லை. இவ்வாறு சென்று போரிட்ட தமிழர்களின் வாரிசுகளுக்கு வேண்டுமானால் இது தெரிந்திருக்கலாம்.

முதலாவது உலகப் போரின்

## அப்போது ஈராக்கின் பெயர் மொசப்பத்தேமியா.....

போது (1914 - 1918) இது நடந்தது. அப்போது துருக்கிய சாம்ராஜ்யத்தைத் தாக்குவதற்காகச் சென்ற பிரிட்டிஷ் படைகளின் ஒரு பகுதியாக இந்திய இராணுவப் படையினரும் சென்றனர். அப்படிச் சென்ற இந்திய இராணுவப் படைப்பிரிவில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் பலர் இருந்தனர்.

இப்படிச் சென்ற தமிழர்கள் பின்னர் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற பிறகு, "அந்தக் காலத்திலே நாங்கள் மொசப்பத்தேமியாவில் சண்டையிட்டபோது....." என்று தொடங்கி தங்களது அனுபவத்தை விவரிப்பவர்களாக இருந்தனர்.

அவர்கள் "மொசப்பத்தேமியா" என்று குறிப்பிட்டது இன்றைய ஈராக்கை ஆகும். ஒரு காலத்தில் ஈராக் நாட்டுக்கு மொசப்பத்தேமியா என்ற பெயர் இருந்தது. அது கிரேக்கர்கள் வைத்த பெயர். "மொசப்பத்தேமியா" என்றால் நதிகள் ஓடும் நாடு என்று அர்த்தம். ஈராக்கின் வடபகுதியில் (யூப்ரடீஸ், டைக்ரீஸ்) இருபெரிய நதிகள் ஓடுகின்றன. இந்த இரு நதிகளுக்கு இடையிலான பிரதேசம் மிகச் செழிப்பானது.

ஈராக் என்ற பெயரிலான தனிநாடு 1921ஆம் ஆண்டில் தான் தோன்றியது. பல நூற்றாண்டுகாலம் அது துருக்கிய சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாகவே இருந்தது. ஈராக் நாடு மட்டுமன்றி, இப்போதைய சிரியா, லெபனான், ஜோர்டான், இஸ்ரேல், சவூதி அரேபியா முதலான நாடுகளும் துருக்கிய சாம்ராஜ்யத்தில் அடங்கியிருந்தன.

முதல் உலகப் போர் தொடங்கியபோது துருக்கி நாடானது ஜேர்மனியின் பக்கம் சேர்ந்து கொண்டது. துருக்கியின் வழியே ஜேர்மனி முன்னேறியதால் இந்தியாவுக்கும் ஆபத்து ஏற்படலாம். தங்களிடமிருந்து இந்தியா பறிபோய் விடலாம் என்று பிரிட்டன் அஞ்சியது. ஆகவேதான் துருக்கியைப் பின்புறத்திலிருந்து தாக்க இந்தியாவிலிருந்து தங்களது படைகளை அனுப்பினர். அந்த வகையில்தான் பிரிட்டிஷ் படைகளின்கீழ் பணிபுரிந்த இந்திய இராணுவத்தினரும் அனுப்பப்பட்டனர்.

மொசப்பத்தேமியா போரில் பிரிட்டிஷ் படைகள் முதலில் (1915) தோற்ற போதிலும் பின்னர் வென்றன. 1917இல் பக்தாத் பிடிபட்டது. உலகப் போரின் முடிவில் துருக்கியின் வசம் இருந்த நாடுகளில் சிலவற்றைப் பிரிட்டனும், பிரான்ஸும் பங்கு போட்டுக் கொண்டன.

ஈராக் அந்த ஏற்பாட்டின் கீழ் பிரிட்டிஷ் ஆட்சிப் பொறுப்பின் கீழ் வந்தது. துருக்கிக்கு எதிரான சண்டையில் ஈராக்கியரும், பிரிட்டனுடன் சேர்ந்து போரிட்டனர். ஆகவே, தங்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிப்படி பூரண சுதந்திரம் வழங்கப்படலாம் என்று ஈராக்கியர் எதிர்பார்த்தனர். அப்படி நடக்கவில்லை. ஏமாந்த ஈராக்கியர் புரட்சியில் ஈடுபட்டனர். அதை அடக்க இந்தியாவிலிருந்து பிரிட்டிஷ் படைகள் சென்றன. பின்னர் பிரிட்டன் சற்று இறங்கி வந்து ஈராக்கியருக்கு சுயாட்சி உரிமை வழங்க ஒப்புக் கொண்டது. இந்த ஏற்பாட்டின் கீழ் ஈராக்கில் மன்னர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. அப்படி மன்னரானவர் ஈராக்கியரே அல்ல. சவூதி அரேபியாவிலிருந்து வந்தவரே. மன்னர் ஆட்சியில் முக்கிய அதிகாரங்கள் பிரிட்டிஷ் ஆலோசகர்கள் வசமே இருந்தன. அந்த கால கட்டத்தில் ஈராக்கில் பணிபுரிய இந்திய அதிகாரிகளும் இங்கிருந்து அனுப்பப்பட்டனர். 1932இல்தான் ஈராக்கிற்கு முழு சுதந்திரம் கிடைத்தது. இதற்குள்ளாக ஈராக்கில் பெற்றோலிய எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டது. பிரிட்டிஷ் எண்ணெய்க் கம்பெனிகள் காலூன்றின.

ஈராக்கை அடுத்தடுத்து ஆண்ட மன்னர்கள் மேற்கத்திய நாடுகளைச் சார்ந்து நின்றனர். நாட்டில் பல்வேறு காரணங்களால் அடிக்கடி குமுறல்கள் தோன்றின. 1958 இல் இராணுவப்புரட்சி ஏற்பட்டு மன்னர் இரண்டாம் பைசால் தூக்கிலிடப்பட்டார். அதன் பிறகு ஏற்பட்ட அரசுகள் எதுவும் நிலையாக இருக்கவில்லை. 1979 ஆம் ஆண்டில் சதாம் ஹுசைன் அதிபரானார்.

அப்போதிலிருந்து அவரது ஆட்சி நீடிக்கிறது. சதாம் பதவிக்கு வந்த மறு ஆண்டில் ஈராக் - ஈரான் போர் தொடங்கி 8 ஆண்டுகாலம் நீடித்தது. அக்கால கட்டத்தில் ஈராக்கிற்கு அமெரிக்கா பல வகைகளிலும் உதவியது. அப்போது சதாம் செய்த பல தவறுகளை அமெரிக்கா கண்டுகொள்ளவில்லை.

அது தனிக்கதை. 1990இல் சதாம் ஹுசைன் குவைத்துக்குச் சொந்தமான தீவுகளைக் கைப்பற்றியதுடன் நிறுத்திக் கொண்டிருந்தால் ஈராக் - அமெரிக்க உறவுகளில் பெரிய மாற்றம் ஏற்படாமல் போயிருக்கலாம்.

இப்போது சதாம் ஹுசைனின் ஆட்சியை அகற்றி அந்நாட்டில் ஜனநாயக அரசை ஏற்படுத்தப் போவதாக அமெரிக்க ஆட்சியாளர்கள் கூறுகின்றனர். ஈராக்கைச் சுற்றியுள்ள அரபு நாடுகள் பெரும்பாலானவற்றில் ஜனநாயகம் என்பது அபூர்வ வஸ்து. மற்ற அரபு நாடுகளில் ஜனநாயகம் இல்லாதது பற்றி கவலைப்படாத அமெரிக்கா, குறிப்பாக ஈராக்கில் ஜனநாயகத்தை ஏற்படுத்தவே போர் நடத்துகிறோம் என்று கூறுவது நம்பத்தக்கதாக இல்லை.

**என்.ராமதுரை**

போர் மேலும் சில மாதங்கள் நீடிக்குமானால் நதிகள் ஓடும் நாடு என்று அழைக்கப்பட்ட ஈராக், இரத்த ஆறு ஓடும் நாடு ஆகிவிடும்.




யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை கடந்த ஆண்டில் நடத்திய மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறியில் பங்குபற்றி, இறுதிப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவிகளுக்கு அண்மையில் சபை நடத்திய சர்வதேச மகளிர் தின விழாவில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதில் மாணவி ஒருவருக்கு யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) பொ.சிவலிங்கம் சான்றிதழ் வழங்குவதை படத்தில் காணலாம். (ஒ-135)

# காணாமற் போனோர் குறித்த விசாரணைக்கு அழைக்கப்பட்டோர்

குடாநாட்டில் காணாமற்போனவர்கள் குறித்து விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ்.பொலீஸ் நிலையத்தில் இன்று நடைபெறும் விசாரணைக்காக அழைக்கப்பட்டவர்களுக்கு ஏற்கனவே கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ள விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர், முகவரி, கோவை இலக்கம் வருமாறு:-

சி.பாலசிங்கம், கைதடி, நுணாவில (கோ.இல.65), கே.ரவீந்திரன் கோவிலாக்கண்டி, கைதடி(கோ. இல.148), பி.குணசேகரன், கோவிலடி மேற்கு, கைதடி (கோ.இல.343), பி.பெரிலானல் கைதடி தெற்கு, கைதடி (கோ.இல.346), பி.சிவகுமார், கைதடி வடக்கு, கைதடி (கோ.இல.349), ஆர்.அருந்தவகுமார், கைதடி கிழக்கு, கைதடி, பி.சற்குணராஜா, அரியாலை தெற்கு, மீசாலை (கோ.இல.59), எஸ்ஜெகதீஸ்வரன் அல்லாரை தெற்கு, மீசாலை (கோ.இல.72), கே.பத்மரூபன், அரியாலை தெற்கு, மீசாலை (கோ.இல.104),கே.மகேந்திரன, மீசாலைமேற்கு, மீசாலை (கோ.இல173).

ஜே.ரகுபதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி (கோ.இல.125),கே.சந்திரகுமார், பொதுவாசிகசாலையடி, சரசாலை மத்தி, சாவகச்சேரி (கோ.இல. 229), எஸ்.விக்னராஜா, கோயில் குடியிருப்பு, சாவகச்சேரி, (கோ.இல.579), எஸ்.இராமசாமி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, (கோ.இல.585), வி.பத்மலிங்கம், பேரம்பலம் சந்தி, சாவகச்சேரி (கோ.இல.721), எஸ்.கங்காதரன், மட்டுவில் தெற்கு, மட்டுவில், சாவகச்சேரி.

மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் இடம்பெறவுள்ள விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்கள் வருமாறு:-

அருளானந்தம் உதயகுமார், அராலி வீதி, மானிப்பாய் (கோ.இல.39), தேவேந்திரன் ஆனந்தராசா, சுதுமலை தெற்கு, மானிப்பாய் (கோ.இல.696), கந்தசாமி நந்தனசந்திரா, அளவெட்டி கிழக்கு, மானிப்பாய் (கோ.இல.176), சிவலிங்கம் சசீதரன், ஓட்டுமடம் வீதி, மானிப்பாய் (கோ.இல.596)

இவர்கள் விசாரணைக்குச் சமுகமளிக்கையில் உரிய ஆவணங்களையும் சமர்ப்பிக்கக் கூடியதாக வருகை தருமாறும் வேண்டப்பட்டுள்ளார்கள். (ஒ-12)

## போதைப்பொருள் கடத்திய இலங்கையர் சென்னையில் கைது!

சென்னை,ஏப்.3

பத்து லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினைக் கடத்திச் சென்றதாகக் கூறப்படும் இலங்கையர் ஒருவர் சென்னை விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் இந்திய சுங்க அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் எந்த நாட்டிலிருந்து வந்தார். எங்கு இந்தப் போதைப் பொருள்களை கடத்திச் செல்ல முற்பட்டார். முதலான விடயங்கள் தொடர்பாக அவரை பொலீஸார் விசாரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-12)

# இந்துசமய விவகார அமைச்சு நடத்திய பேச்சு, பண்ணிசை போட்டிகளின் முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.3

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.பிராந்திய அலுவலகத்தினால் யாழ்மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட பேச்சு மற்றும் பண்ணிசைப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் எதிர்வரும் 10ஆம், 11ஆம் திகதிகளில் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ள தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்வர் எனவும்-

மாவட்ட ரீதியாக நடைபெற்ற போட்டிகள் ஒவ்வொன்றிலும் முதல் ஆறு இடங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறும் மாநில மாநாட்டில் வைத்து பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேச்சுப் போட்டியில் முதல் ஆறு இடங்களைப் பெற்றவர்கள் பெயர்களும், அவர்கள் கற்கும் பாடசாலைகளும் பிரிவு ரீதியாக வருமாறு-

**கீழ்ப்பிரிவு**

ப.உபேந்திரா - யாழ்.மத்திய கல்லூரி, ப.டிலானி - சாவகச்சேரி இந்துக்கல்லூரி, கு.கோபிகா - யாழ். இந்துக்மகளிர் கல்லூரி, யோ.கார்த்திகா - மகாஜனாக் கல்லூரி, ச.கீரன்- வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி, சி.பரிபூர்ணா - யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

**மேற்பிரிவு**

கு.குருபரன் - யாழ்இந்துக் கல்லூரி, தே.டசிகா - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, செ.சுரேஸ்கரன் - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம், க.கலைவாணி - வைத்தீஸ்வராக்கல்லூரி, யாழ்ப்பாணம், போ.சித்திரா - கொக்குவில் இந்துக்கல்லூரி, து.துவாரகா - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

**மத்தியபிரிவு**

ம.மயூரா - வேம்படி மகளிர் கல்லூரி, க.கலையரசி - அச்சுவேலி புனித திரேசா மகாவித்தியாலயம், தெ.ஹர்சன் - யாழ்.மத்தியகல்லூரி, போ.சுதாகரன் - யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை, விஜயராஜ்- யாழ்.மத்தியகல்லூரி, ம.விஜிதரன் -ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்.

பண்ணிசைப் போட்டி முடிவுகள் பிரிவு ரீதியாக வருமாறு:

**கீழ்ப்பிரிவு**

தெ.பவனுஜா - யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, சே.கோபிகா -மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை, தே.விதுர்ஷன் - கொக்குவில் இந்துக் கல்லூரி, சி.பிரபூர்னா - யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை சு.அம்பிகா - இராமநாதன் கல்லூரி, ஜெ.சந்துருகேசன் - யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.

**மத்தியபிரிவு**

கு.ஜெகதீசன் - யூனியன் கல்லூரி, ம.தயாபரன் - யாழ்.மத்தியகல்லூரி, ஜெ.வைஷ்ணவி - மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, வி.ஜிவிகா - யூனியன் கல்லூரி த.கவாஸ்கா - யாழ்.இந்துக்கல்லூரி, அ.அமிர்தலோஜன் - கொக்குவில் இந்துக்கல்லூரி.

**மேற்பிரிவு**

ந.தனசொரூபி - கொக்குவில் இந்துக் கல்லூரி, கோ.சிவராஜா -பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, சு.கபிலன் - சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, விநளாஜினி - யூனியன் கல்லூரி, மு.கௌசலா - யூனியன் கல்லூரி, பு.சுகன்யா - புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக்கல்லூரி.

# பனைவெல்ல உற்பத்திக்கு சங்கானையில் ஏற்பாடு

சண்டிலிப்பாய், ஏப்.3

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் பதநீரிலிருந்து பனை வெல்லத்தைத் தயாரிக்கும் தொழில் நிலையம் ஒன்றை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது. இம்மாதத்தில் பெண் பனைகளில் பதநீர் பெறக்கூடிய வாய்ப்பிருப்பதால் பனை வெல்லத்தை உற்பத்தி செய்யவிருப்பதாக சங்கப் பொது முகாமையாளர் த.செல்வராசா தெரிவித்தார்.

இங்கு சீனிக்குப் பலத்த தட்டுப்பாடும் விலை ஏற்றமும் நிலவிய 1994 ஆம், 1995 ஆம் ஆண்டுகளில் இச் சங்கம் உற்பத்தி செய்த பனை வெல்லத்திற்கு மக்களிடையே வரவேற்பு இருந்து வந்தது. பின்னர் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின் போதும் இடம்பெயர்வுகளின் போதும் இச்சங்கத்தின் பனை வெல்ல உற்பத்தி தடைப்பட்டிருந்தது. தற்போது மீண்டும் வெல்ல உற்பத்தி ஆரம்பிக்கப்படவுள்ளதால் இதற்கான கட்டடமும் அடுப்புகளும் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

இம்மாதத்தில் உற்பத்தி ஆரம்பிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-135)

## நூல் வெளியீடு

அருட்தந்தை எஸ்.எவ்.கிருபானந்தன் அடிகளார் எழுதிய 'மூன்றாம் உலகப் பார்வையில் உலகமயமாக்கல்' என்ற நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழன் பிற்பகல் 4.30 மணிக்கு யாழ் கியூடெக நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை சி.ஜெ.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் நூலின் முதற்பிரதியை யாழ். ஆயரின் பிரதிநிதி குருமுதல்வர் செல்வராசா பெற்றுக்கொள்வார்.

நூலின் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக பொருளியற்றுறை தலைவர் வி.பி.சிவநாதன் நிகழ்த்துவார். (ஒ-9)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

வீட்டுப்பாவனைக்குரிய இரண்டு பெரிய யன்னல்கள், கதவு செய்வதற்குரிய பலகை, 5 லாச்சி கொண்ட மேசை, புதிய மெத்தை என்பன விற்பனைக்குண்டு. 181, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (16268)

பாவனையில் உள்ள SF 1016, SF 1118, SHARP போட்டோஸ்ரட் மெஷின்கள், 3K.V. Robin பெற்றோல் மின்பிறப்பாக்கி, 6 ரோலர்கள் கொண்ட Lami Art லெமனேற்றிங் என்பன மிகவும் மலிவான விலையில் உடன் விற்கப்படும். தொடர்பு: 461, நாவலர் வீதி, அத்தியடிச் சந்தி, யாழ்ப்பாணம். (16261)

### தவறிவிட்டது

சிற்றம்பலம் புஸ்பாகரன் என்பவரது தே.அ.அ. (இல.603273257V), வி.அ.அ., G.T.Z.I.S அ.அட்டை என்பன யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் தனியார் பஸ்வண்டியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் G.T.Z. காரியாலயம், 521/11, நல்லூர் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (16266)

### மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 40 வயதுடைய, திருமணமாகி விவாகரத்துப் பெற்ற, நோர்வேயில் பிரஜாவுரிமையுடைய, 10 வயதில் ஆண்குழந்தையுடைய பெண்ணுக்கு பெற்றோர் தகுந்த வரனை எதிர்பார்க்கின்றனர். ஸ்பொன்சர் மூலம் அழைக்கப்படுவார். விவாகரத்துப் பெற்றவர்களும் தொடர்புகொள்ளலாம். தொடர்பு: மே/பா1836, உதயன்.(16260)

### பண்டத்தரிப்பில் சீருடை விநியோகம்

பண்டத்தரிப்பு பல நோ.கூ. சங்கம தனது பிரிவிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகளை நாளை சங்கத் தலைமை அலுவலகத்தில் வைத்து விநியோகம் செய்யவுள்ளது. உரியவர்கள் நேரில்வந்து பெற்றுக்கொள்ள முடியும் என்று சங்க பொது முகாமையாளர் சு.வைரவநாதன் தெரிவித்தார். (ஒ-135)

### தேவை

நன்றாகத் தையல் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:
அபர்ணா
மகளிர் தையல் நிலையம்
இல. 410, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(C-2706)


புதுக்கடை திறப்பு விழா

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் பங்குனி மாதம் 20 ஆம் நாள் இன்று (03.04.2003) வியாழக்கிழமை மு.ப.11.30 மணியளவில் அதிகாரம் பெற்ற விற்பனையாளர்

குறிஞ்சி ரேடர்ஸ்

என்னும் வியாபார ஸ்தாபனத்தை வைபவரீதியாக எம்மால் ஆரம்பித்து நடத்த இருப்பதனால் வாடிக்கையாளர்கள், அன்பர்கள் அனைவரையும் வருகை தந்து எமக்கு ஆதரவு நல்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

விசேட கொடுப்பனவு

3ஆம் திகதி தொடக்கம் 15-04-2003வரை நீங்கள் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு மோட்டார் சைக்கிளுக்கும் 1000/-விலைக் கழிவுடன் ஹெல்மட், ஜக்கட், வைடர் பாக் என்பன வழங்கப்படும்.

பஜாஜ் புத்தம் புதிய மோட்டார் சைக்கிள்கள்

- பல்சர்(150C.C) செல்வ் ஸ்ராட்
- பொக்சர் CT
- பொக்சர் A.T
- கிளாஸிக் S.L.
- லெஜன்ட்
- கலிபர்குரோமா
- M-80 டீ ஸ்ரோக்
- கலிபர்
- ஸ்பிரிற் (பெண்களுக்கு)
- பொக்சர் டீலக்ஸ்

இல.6, நவீன சந்தை, சாவகச்சேரி.

DPMC

இல.75, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 077-626919 (16267)



நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

சருமத்துக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

சித்தாரா பொன்னாங்காணி தைலம்

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி.இல.-021-222-2567
(16219)


### பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டெட்

**சம்பளம் வழங்கல்**

பரந்தன் தொழிற்சாலை ஊழியர்களின் சம்பளம் 09-04-2003 (புதன்கிழமை) தொடக்கம் 12.04.2003 (சனிக்கிழமை) வரை வழமையான இடத்தில் வைத்து வழங்கப்படும்.

கா.சிவபாதசுந்தரம்
(தொழில் முகாமையாளர்)

(16265)

### கொக்குவில் இந்து மயான அபிவிருத்தி சபை, நிர்வாக சபைத் தெரிவிற்கான பொதுக்கூட்டம்

மேற்படி பொதுக்கூட்டம் எதிர்வரும் 12-04-2003ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் பிரதேச சபை கொக்குவில் பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. குறிப்பிட்ட மயானத்தை உபயோகிக்கும் பொது மக்கள் அனைவரையும் தவறாது சமுகம் தந்து நிர்வாக சபைத் தெரிவுக்கு ஒத்துழைப்பு வழங்கி மயான அபிவிருத்திக்கு உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

பிரதேச சபை
தலைமை அலுவலகம்
திருநெல்வேலி.
28-03-2003

செ.செல்வரட்ணம்
செயலாளர்,
நல்லூர் பிரதேச சபை.

(27096)

# முட்டாள் தின கொண்டாட்டம் நாடாளுமன்றத்தில் களைகட்டியது இரத்தினக்கல் விவாதம் உறுப்பினர்கள் மத்தியில் சூடு பறந்தது

முட்டாள்கள் தினம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்திலும் கலகலப்பையும் சலசலப்பையும் ஏற்படுத்தியது.

ஜே.வி.பிபிரசார செயலாளர் விமல வீரவன்ஸ, நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வருக்கு பிறந்தநாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அதில் பங்குகொண்டனர்.

சிறிதும் எதிர்பாராத வகையில் எகோபித்து ஒலித்த வாழ்த்துச் செய்தியைக் கேட்டு திடுக்கிட்டெழுந்த அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர், இல்லை, இல்லை, இன்று எனது பிறந்தநாள் அல்ல. நண்பர் விமல் வீரவன்ஸ ஏதோ பிதற்றுகிறார். அவருக்கு ஏதோ தட்டிவிட்டது என்றார்.

அமைச்சர் பொய் சொல்லுகிறார். இன்றுதான் அவருடைய சரியான பிறந்த தினம் என்று எதிரணியினர் மேசைகளைத் தட்டி வாழ்த்தினர். எனினும் அமைச்சர் அஸ்வர், 'இல்லை, இல்லை' என்று மறுத்தார்.

இல்லை, இல்லை, இன்று சர்வதேச முட்டாள்கள் தினம் என்பதால் அமைச்சர் பொய் சொல்கிறார் என விமல் வீரவன்ஸ குறிப்பிட்டார். இதனால், சபையின் இரு பக்கத்திலும் கலகலப்பு ஏற்பட்டது.

நேற்றுமுன்தினம் காலை 10.00 மணிக்கு குழுக்களின் பிரதித் தலைவர் சிறி ஹந்திரா ஹென்னெதி தலைமையில் கூடியது.

வழமையான கேள்வி பதில்களுககுப் பின்னரே ஜே.வி.பி.உறுப்பினரான விமல் வீரவன்ஸ சபையில் இக்கலகலப்பை ஏற்படுத்தினார்.

### இரத்தினக்கல் விவாதம் ஆரம்பம்

இதனைத் தொடர்ந்து காலி மாவட்ட ஜேவிபிஉறுப்பினரான அசல ஜாகொட, இரத்தினக்கல் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் வகையில் அதி நவீன வசதிகளைக் கொண்ட ஆய்வுகூடம் ஒன்றை அமைக்க வேண்டும் என தனி நபர் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

ஜே.வி.பி.உறுப்பினரான அசல ஜாகொட முன்வைத்த இப் பிரேரணைக்கு ஆளும் கட்சி உறுப்பினர்களும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஏக மனதாக ஆதரவைத் தெரிவித்தனர்.

விவாதத்தின் போது இரத்தினக்கல் விளையும் பிரதேசமான சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களே கூடுதலாக உரையாற்றினர்.

காலி மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினரான அசல ஜாகொட, இரத்தினக்கல் தொழில் அபிவிருத்தி தொடர்பான பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தமைக்காக பாராட்டுகின்றேன். ஆனால், அந்த உறுப்பினருக்கு இரத்தினக்கற்களின் பெயர்களாவது தெரியுமா? அவற்றின் பெறுமதி தெரியுமா? என்று கிண்டல் அடித்தார் அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே.

இதே போன்று இருபக்கத்தாலும் ஒருவர் மீது ஒருவர் சேற்றை வாரி வீசிக்கொள்ளவும் தவறவில்லை.

பிரேரணையை முன்மொழிந்து பேசிய அசல ஜாகொட, அவிசாவளை பிரதேசத்திலும் சப்ரகமுவ மாகாணத்தில் ஏனைய பகுதிகளிலும் பாதைகளை அமைக்க முடியாமல் இருக்கிறது. இப்பிரதேசத்தில் உள்ள அரச ஆதரவாளர்களும் அரசியல்வாதிகளும் பாதைகளுக்கு அடியில் இரத்தினக்கல் தோண்ட ஆரம்பித்து விடுகின்றனர். இதனால், இப்பிரதேசத்தில் பாதை அபிவிருத்தி வேலைகள் தடுக்கப்பட்டுள்ளன என்று சாடினார்.

### பொ.ஐ.முவினரைச் சாடல்

இவருக்கு பதிலடி கொடுப்பது போல் பேசினார் இரத்தினபுரி மாவட்ட ஐதேக. உறுப்பினரான மஹிந்த ரத்னதிலக்க.

அவிசாவளை பிரதேசத்தில் பாதை அமைக்க முடியாமல் இரத்தினக்கல் தோண்டி இடையூறு செய்தவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதேச சபை, மாகாணசபை உறுப்பினர்களின் உறவினர்களும் ஆதரவாளர்களும் தான். இப்படி இடையூறு விளைவித்து - சட்ட விரோதமாக - இரத்தினக்கல் தோண்டிய 32 பேர் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.இவர்கள் அனைவரும் பொதுஜன ஐக்கிய முன்னணியினர் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, முன்னைய அரசின் போது இரத்தினக்கல் ஆய்வு நிலையம் அமைப்பதற்கு 5கோடி ரூபாவை ஜனாதிபதி ஒதுக்கீடு செய்தார். ஆனால், ஒரே மாதத்தில் அதை ஏப்பம்விட்டு விட்டனர்.அதற்கு என்ன ஆனது என்றும் தெரியவில்லை என்றார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள அரசியல் வாதிகள் எல்லோரும் அரச தோட்டக் காணிகளில் பலவந்தமாக இரத்தினக்கல் தோண்டுகின்றனர் ஏழைக்கிராம மக்கள் அங்கு கூலிக்கே வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று ஜே.வி.பியினர் குற்றஞ்சுமத்தினர்.

"ஆம் இரத்தினபுரி ஆற்றில் மீன் பிடித்து வருமானம் பெறமுடியும். அங்கே இரத்தினக்கல் தோண்டித்தான் பிழைக்க முடியும். இங்குள்ள மூலவளம் இரத்தினக்கல்தான். அதை ஜே.வி.பியினர் தெரிந்துகொள்ள வேண்டும்" என பதிலடி கொடுத்தார் அமைச்சர் சுசந்தபுஞ்சிநிலமே.

மேலும் சில நல்ல திட்டங்களையும் அமைச்சர் முன்வைத்தார். முன்பு இரத்தினக்கல் தோண்டுவது குறிப்பிட்ட சில இனத்தவர்களுக்கு மட்டுமே உரிய




தொழிலாக இருந்தது. ஆனால், இன்று அந்த நிலைமாறிவிட்டது. தனியார்களும் தமது சொந்தக் காணிகளில் இரத்தினக்கல் தோண்டுவதற்கான அனுமதிகளை வழங்கும் முடிவு இலகுபடுத்தப்பட்டுள்ளது.

இப்பொழுது மடகஸ்காரில் பெருமளவு இரத்தினக்கற்கள் விளைகின்றன. அங்கு 1,500 இலங்கையர்கள் இரத்தினக்கல் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வியாபாரிகள் ஒன்றரை லட்சம் ரூபா மட்டுமே அங்கு கொண்டு செல்ல தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், இந்தக் கட்டுப்பாடு நீக்கப்படவேண்டும். தேவையான பணத்தைக் கொண்டுசெல்ல அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். ஆனால், கொண்டுசெல்லும் பணத்திற்கு சமமான இரத்தினக்கற்களை இங்கு கொண்டு வர வேண்டும். இங்கு பட்டை தீட்டி அவற்றை கூடுதலான விலைக்கு விற்க முடியும் என்றும் கூறினார்.

### பவித்திராவின் கவலை

முன்னாள் முதலமைச்சரும் இரதினபுரி மாவட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினருமான பவித்திராதேவி வன்னி ஆராச்சி, இரத்தினபுரி மாவட்டத்தில் ஏழைக்கிராமத்தவர்கள் ஏமாற்றப்படுவது தொடர்பாக விவரித்தார். மேலும், இரத்தினக்கல் வியாபாரிகள் இரத்தினக்கற்களுக்கு குறித்த விலை கொடுத்து மோசடி செய்து விடுகின்றனர். எனவே, இரத்தினக் கற்களின் சரியான விலையை நிர்ணயிப்பதற்கான ஆய்வு நிலையம் ஒன்றை அமைக்க வேண்டும். இதன்மூலம் மோசடியைத் தவிர்க்க முடியும் என்றார் பவித்திரா தேவி வன்னி ஆராச்சி.

இத்தனை பேச்சுக்களும் எவ்விதமான ஆரவாரமுமின்றி அமைதியாகவே நடைபெற்றன. இப்பேச்சுக்களை இருதரப்பிலும் காணப்பட்ட காலி ஆசனங்கள் மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தன. சபை தூங்கி வழிந்து கொண்டிருந்தது.

### தட்டி எழுப்பினார் அஸ்வர்

தூங்கிக்கொண்டிருந்த சபையைத் தட்டி எழுப்பினார் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர்.

இரத்தினக்கல் அகழ்வு தொடர்பாக உரையாற்றிக்கொண்டிருந்த அமைச்சர், திடீரெனத் தமிழ்த் தேசியப் பத்திரிகை ஒன்றின்மீது பாய்ந்தார். ஈராக் யுத்தம் தொடர்பாக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் தமது கருத்தைத் தெரிவிக்காமல் மௌனம் சாதிப்பது ஏன்? இதனால், இலங்கை வாழ் இஸ்லாமியர்கள் மத்தியில் பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது என்ற செய்தியே அப்பத்திரிகையில் வெளிவந்திருந்தது. மேற்படி செய்தி ஆதாரமற்றது என்று வெடித்தார் அஸ்வர்.

மதிய இடைவேளையின் பின்னரும் அமெரிக்க - ஈராக் யுத்தம் சபையில் எதிரொலித்தது. தமிழர் தேசியக்கூட்டணி உறுப்பினர் சிவாஜிலிங்கம் எம்.பிக்கும் அமைச்சர் அஸ்வருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

ஈராக்மீது அமெரிக்கா போர் தொடுத்திருப்பதை இலங்கை அரசு ஆதரிக்கின்றதா? அமெரிக்க, பிரிட்டன் தூதரகங்களுக்கு விசேட கொமாண்டோ பாதுகாப்பு வழங்கியிருப்பது ஏன்? அமெரிக்காவை ஆதரிக்கின்றீர்களா? இந்த வளைகுடா யுத்தம் தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன? என்று கேட்டார் சிவாஜிலிங்கம் எம்.பி.

### அஸ்வர்-சிவாஜி மோதல்

நாங்கள் எந்த ஒரு நாட்டிலும் யுத்தம் நடைபெறுவதை ஆதரிப்பவர்கள் இல்லை. முஸ்லிம் மக்கள் மீது உங்களைவிட எங்களுக்கு அதிகமான அக்கறை உண்டு தம்பி. நீங்கள் கவலைப்படவேண்டாம். இதைக் காலையிலும் கூறிவிட்டேன். இப்போதும் கூறுகின்றேன் என்றார் அமைச்சர் அஸ்வர், சிவாஜிலிங்கம் எம்.பியைப் பார்த்து.

உங்களுடைய அரசின் நிலைப்பாடு என்ன? வெளிப்படையாகக் கூறுங்கள். நீங்கள் ஈராக்மீது பாசம் உள்ளவர்கள் என்பது உண்மையானால் நாங்கள் அமெரிக்கத் தூதரகத்தின் முன் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தப் போகின்றோம் நீங்களும் வந்து கலந்து கொள்வீர்களா என்று மீண்டும் சீண்டினார் சிவாஜிலிங்கம் எம்.பி. எனினும் தான் யுத்தத்தை விரும்பவில்லை என்று கூறிய அமைச்சர், சிவாஜிலிங்கம் எம்பியின் கேள்விக்கு நேரடியான பதிலை அளிப்பதில் இருந்து நழுவிவிட்டார்

தொடர்ந்து விஜித்த ஹேரத் எம்.பியால் முன்வைக்கப்பட்ட தேசிய தொழிநுட்பத்தை அபிவிருத்தி செய்ய துரித திட்டம் ஒன்றை எடுப்பது தொடர்பான பிரேரணை, சஞ்சீவ கவிரத்ன எம்பியால் முன்வைக்கப்பட்ட மத்திய மலைநாட்டுப் பகுதியை பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்துதல் தொடர்பான தனிநபர் பிரேரணை ஆகியனவே சபையில் விவாதிக்கப்பட்டன.

நாடாளுமன்றம் ஜூன் ஆறாம் திகதி மீண்டும் கூடும். (ஐ)

# ஒறுகொடவத்தவில் ஒன்றுமே நடக்கவில்லை என்று கூறுகிறார் குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரி!

ஒறுகொடவத்த கம்கரு நிவச மாவத்தை வீட்டில் பாரிய குற்றங்கள் எதுவும் நடந்ததாகப் பூர்வாங்க விசாரணைகளில் உறுதிசெய்யப்படவில்லை.

இவ்வாறு கொழும்பு பொலீஸ் குற்றத்தடுப்பு பிரிவு பணிப்பாளர் சரத் லூல்கொட தெரிவித்தார்.

ஒறுகொடவத்த வீடொன்றில் பாத்திமா (வயது 13) என்ற சிறுமி மீட்கப்பட்டது தொடர்பான விசாரணையை குற்றத்தடுப்பு பிரிவு பணிப்பாளர் சரத் லூல்கொட தலைமையிலான பொலீஸ் குழு மேற்கொண்டு வருகிறது.

இச்சம்பவம் தொடர்பாக ஊடகங்களுக்குத் தெளிவுபடுத்தும் விசேட செய்தியாளர் சந்திப்பு பொலீஸ் தலைமையகத்தில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக சரத் லூல்கொட மேலும் தெரிவித்ததாவது:-

சர்ச்சைக்குள்ளாகியுள்ள அந்த வீட்டை சம்பவ தினத்தன்று சட்ட விரோதமாக உடைத்தவர்கள் அங்கிருந்த பல தடயப் பொருள்களையும் எரித்து விட்டனர். இதனால், பொலீஸாருக்கு தமது கடமைகளைச் சரியாகச் செய்ய முடியாமல் போய் விட்டது. பொலீஸார் முதலாவது தடவை வீட்டை சோதனை இட்ட போது, சிறுமியைக் கண்டு பிடிக்கவில்லை. அது பொலீஸாரின் தவறுதான். அந்தக் குற்றத்துக்காக நான்கு பொலீஸ் அதிகாரிகள் சேவையில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அந்த வீட்டின் உரிமையாளரின் மனைவி நிஷாந்தி லியனகேயின் தாயாரின் வீட்டிலிருந்தே - கொட்டாஞ்சேனை கல்பொத்தையில் - ஷெரின் அன்ரியா (வயது 17) என்ற சிறுமியை பொலீஸார் மீட்டுள்ளனர்.இவர் ஒறு கொடவத்தவில் மீட்கப்பட்ட சிறுமியின் சகோதரியாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கிறோம். இதற்கான டி.என்.ஏ. பரிசோதனை செய்யப்படவுள்ளது. இவர்களது தாய் எனப்படும் ரோஸ் என்பவரைப் பொலீஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர். ஒறுகொடவத்தவில் சிறுமியை அடைத்து வைத்திருந்த நிஷாந்தி லியனகேயுக்கு 24 வயதுடைய மகளும், இரண்டரை வயதுடைய குழந்தையும் உள்ளனர். 24 வயது மகள் நிஷாந்தியின் முதல கணவருக்கும் அவரது மற்றைய குழந்தை இரண்டாவது கணவருக்கும் பிறந்தவர்கள். நிஷாந்தியின் முதலாவது கணவர் காலமாகிவிட்டார். இரண்டாவது கணவர் இவர்களை விட்டுப் பிரிந்து வெளிநாட்டில் வசிக்கிறார் என்றும் எமக்குத் தெரியவந்துள்ளது.

ஒறுகொடவத்த வீட்டில் மீட்கப்பட்ட பாடசாலைச் சீருடைகள் நிஷாந்தியின் மூத்த மகளுடையவை என அடையாளம் காணப்பட்டுள்ளது. எஸ்பி.சி. என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பாடசாலைச் சீருடை சென். பிரிஜட் கொன்வென்ட் பாடசாலையையும் எஸ்.எல்.சி. என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சீருடை வெள்ளவத்தை சென்.லோரன்ஸ் பாடசாலையையும் குறிப்பதாகும்.

நிஷாந்தியினுடைய மகள் 9 ஆம் ஆண்டு வரை எஸ்பி.சியிலும், அதன் பின் 11ஆம் ஆண்டு வரை எஸ்.எல்.சியிலும் கல்வி கற்றார் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆகவே, மீட்கப்பட்ட பாடசாலைச் சீருடைகள் அவருடையதென ஊர்ஜிதமாகியுள்ளது.

நிஷாந்தி மணப்பெண் அலங்கரிப்பு, சிகை அலங்காரம் என்பவற்றுக்காக ஆடைகளைத் தைத்து விற்றும் வாடகைக்கு வழங்கியும் தமது வருமானத்தைத் தேடிக்கொண்டார். இவரின் தாயாரின் வீடு அமைந்துள்ள கொட்டாஞ்சேனை, கல்பொத்தையில் மணப்பெண்களை அலங்கரிக்கும் கடை ஒன்று இவருக்குச் சொந்தமாக இருப்பதும் தெரியவந்துள்ளது. இதனால் தான் இவரது வீட்டில் பல தைத்த ஆடைகள் இருந்தன.

ஆடைகள் சந்தேக நபரின் வீட்டு நிலத்துக்குள் இருந்து மீட்கப்பட்டதாக கூறப்படுகின்றது. ஆனால், அவற்றை பொலீஸார் வருவதற்கிடையில் பொதுமக்கள் தீவைத்துக் கொளுத்திவிட்டனர். தீயணைக்கும் படையினர் அங்கு வந்து தீயை அணைக்க முற்பட்டனர். அப்போது வேகமாக அடிக்கப்பட்ட நீரால் ஆடைகள் மண்ணில் புதையுண்டு இருக்கலாம் என்று நாம் கருதுகின்றோம்.

அந்த வீட்டில் வாகனங்கள் வந்து போவதாகத் தெரிவிக்கப்பட்டது. அது நிஷாந்தியின் 24 வயது மகளின் காதலனுடைய வாகனங்களே. நிஷாந்தியின் மகளின் காதலன் ஒரு தமிழர். அவர் கொழும்பில் - பெரிய வர்த்தகர். அவர் பல வாகனங்களில் அங்கு வந்து சென்றுள்ளார். நிஷாந்தியின் மூத்த மகள் ஒரு சர்வதேசப் பாடசாலையில் ஆசிரியையாகப் பணி புரிகிறார்.

சிறுமியைச் சங்கிலியால் கட்டி வைத்ததே நிஷாந்தி செய்த குற்றமாகும். பாத்திமா ஓர் இளைஞனுடன தொடர்பு வைத்திருந்தாள். அது எனக்குப் பிடிக்கவில்லை. அதனால் பாத்திமாவை நான் கட்டிவைத்தேன் என்று நிஷாந்தி எம்மிடம் தெரிவித்தார். பாத்திமா அருகிலுள்ள பேக்கரியில் வேலை செய்யும் இளைஞனுடன் தொடர்பு வைத்திருந்தார் என்பது விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அந்த பேக்கரி இளைஞன் கனில்வத்தளையில் இருப்பது தெரியவந்துள்ளது. அவரிடம் விசாரணைகளை நடத்த பொலீஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்தோடு, நிஷாந்தியின் இரண்டரை வயதுக் குழந்தை உண்மையாகவே அவரது குழந்தைதானா என்பதை உறுதி செய்ய வைத்திய பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

\- இவ்வாறு தெரிவித்தார் அவர். (ஒ)

## வெளியாகும் 'திடுக்' தகவல்கள்

ஒறுகொடவத்தவில் சிறுமி மீட்புச் சம்பவம் இடம்பெற்ற பின்னர் அது தொடர்பாக அது போன்ற வேறு சில சம்பவங்கள் பற்றியும் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

சித்தி பரீடா, பாத்திமா சபீயா ஆகிய சிறுமிகளைக் காணவில்லை என முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவர்களில் பாத்திமா சபீயா கடைசியாக அணிந்திருந்த 'பர்தா' உடை ஒறுகொடவத்த வீட்டில் மீட்கப்பட்ட உடைகளின் மத்தியில் இருந்ததை தொலைக்காட்சியில் கண்டதாக அவரது பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சேனா தீர வசந்தி ரேணுகா என்ற பெண், கடந்த சில தினங்களுக்கு முன் ஷெசிந்தா கெலும் என்ற தமது மகள் காணாமற்போனதாக கிராண்ட்பாஸ் பொலீஸில் முறைப்பாடு செய்தார். ஓரிரு தினங்களுக்குப் பின் அவரது மகள் மீண்டும் கிடைத்தார். அது தொடர்பாகவும் அவர் பொலீஸாரிடம் தெரிவித்துள்ளார்.

ஷெசிந்தா கெலும் தாம் கடத்தப்பட்டமை தொடர்பாக தெரிவித்ததாவது:-

மாளிகாவத்தை ரணசிங்க மத்திய மகாவித்தியாலயத்திலேயே நான் படிக்கின்றேன். ஒரு நாள் பாடசாலை விட்டு வரும்போது ஒரு 'அன்ரி' என்னை வீட்டில் கொண்டுபோய் விடுவதாகத் தெரிவித்தார். அவர் என்னை ஓட்டோ ஒன்றில் ஏற்றி எங்கோ கொண்டு சென்றார். பல வளைவுகளைத் தாண்டி ஓர் இடத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். அங்கு என்னைப் போல் 14 பிள்ளைகள் இருந்தார்கள். என்னை யாருடனும் கதைக்கவிடவில்லை. பின்னர் எனக்கு ஒருவிதத் தீங்கும் ஏற்படுத்தாமல் வீட்டுக்கருகில் கொண்டு வந்துவிட்டுவிட்டு சென்றுவிட்டார்கள் - என்று தெரிவித்தார். (ஒ)

# சார்ஜா சுற்றுப்போட்டிகள் இன்று ஆரம்பம் பாக்—ஸிம்பாப்வே அணிகள் மோதல்

சார்ஜா கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது. உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் முடிவுற்றபின் நடைபெறும முதலாவது சர்வதேச கிரிக்கெட் சுற்றுப்போட்டி இதுவாகும். இலங்கை, பாகிஸ்தான், ஸிம்பாப்வே, கென்யா ஆகிய அணிகள் இப்போட்டிகளில் பங்குபற்றுகின்றன.

சகல போட்டிகளும் பகல் - இரவு ஆட்டங்களாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. தினமும் இலங்கை நேரப்படி மாலை 5 மணிக்கு ஆட்டங்கள் ஆரம்பமாகவுள்ளன. இவ் ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணி பங்குபற்றவிருந்தது. எனினும், பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக அவ்வணி இத்தொடரிலிருந்து விலகிக் கொண்டது. அதற்குப் பதிலாகவே கென்யா, ஸிம்பாப்வே அணிகள் சேர்க்கப்பட்டன.

இத்தொடரின் முதல்சுற்றில் ஒவ்வொரு அணியும் ஏனைய அணிகளைத் தலா ஒரு தடவை எதிர்த்தாடவுள்ளன. எதிர்வரும் 10ஆம் திகதி இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது.

பாகிஸ்தான் அணி அதன் நட்சத்திர வீரர்களில் பெரும்பாலானோரை இழந்துள்ளது. ரஷிட் லத்திவ் தலைமையிலான பாக்.அணி இளம் வீரர்களுடன் பரீட்சார்த்த முயற்சிகளில் ஈடுபடவுள்ளது.

ஸிம்பாப்வே அதன் நட்சத்திர வீரரான அன்டி பிளவரின் பங்களிப்பின்றி இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளது.

இத்தொடரில் பங்குபற்றும் டெஸ்ட் அந்தஸ்தற்ற ஒரே அணி கென்யா ஆகும். உலகக்கிண்ணத் தொடரைப் போன்று அதிர்ச்சிகளை ஏற்படுத்த அவ்வணி மீண்டும் முற்படலாம். ஆனால், அதன் நீண்டகால பயிற்றுநராக இந்தியாவின் சந்தீவ் பட்டேல் உலகக்கிண்ணப் போட்டிகளுடன் விலகிவிட்டார்.

அதனால், சார்ஜா போட்டிகளின் போது தமது அணியின் பயிற்றுநர் ஆப்தி அலியை கென்ய அணிக்கு மாற்றுப் பயிற்றுநராக வழங்குவதறகு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

போட்டி அட்டவணை

ஏப்.3: பாகிஸ்தான் - ஸிம்பாப்வே
ஏப்.4: பாகிஸ்தான் - இலங்கை
ஏப்.5: கென்யா - ஸிம்பாப்வே
ஏப்.6: கென்யா - இலங்கை
ஏப்.7: இலங்கை - ஸிம்பாப்வே
ஏப்.8: கென்யா - பாகிஸ்தான்
ஏப்.10: இறுதிப் போட்டி.

(ஒ-5)

# கரபந்தாட்டப் போட்டியில் நயினை கணேசா சம்பியன்

யாழ்ப்பாணம்,ஏப்.3

தீவகக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 15 வயது, 17 வயதுப் பிரிவுகளுக கிடையிலான இறுதியாட்டத்தில் நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட மகா வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அண்மையில் ஊர்காவற்றுறை புனித அந்தோணியார் கல்லூரி மைதானத்தில் இவ் இறுதியாட்டங்கள நடைபெற்றன. முதலில் நடைபெற்ற 15 வயதுக்குட்பட்டோருக்கான ஆட்டத்தில் நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட மகாவித்தியாலயம் ஊர்காவற்றுறை புனித அந்தோணியார் கல்லூரியைத் தோற்கடித்து சம்பியனாகியது.

அடுத்து நடைபெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்திலும் நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட மகாவித்தியாலயம் அதனை எதிர்த்து விளையாடிய நெடுந்தீவு மகாவித்தியாலயத்தை வென்று சம்பியனாகியது.

இறுதியாக நடைபெற்ற 19 வயதுப் பிரிவினர்களுக்கிடையான இறுதியாட்டத்தில் ஊர்காவற்றுறை அந்தோணியார் கல்லூரி, நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட மகாவித்தியாலயத்தை வென்று சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது.

இதேவேளை - வேலணைக் கோட்டத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட உடற்பயிற்சிப் போட்டியில் நயினாதீவு ஸ்ரீகணேசா கனிஷ்ட வித்தியாலயம் ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தினையும், பெண்கள் பிரிவில் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டது. (எ-5)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.3

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி மற்றும் கனிஷ்ட வித்தியாலயம் ஆகியன இணைந்து நடத்தும் வருடாந்த மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் முதல்வர் வி.சச்சிதானந்தம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளர் ஐ.அமரகுலசிங்கமும், பழைய மாணவர் சங்கப் பொருளாளர் க.கனகநாயகமும் கலந்து கொள்வர். (ஒ-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு பிற்போடப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

ஆட்டங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:-

எதிர்வரும் 5 ஆம் திகதி ஜொனியன்ஸ் வி.க. எதிர் அரியாலை வி.க.

எதிர்வரும் 6 ஆம் திகதி - யாழ். சென்றல் வி.க. எதிர் கே.சி.சி.சி.வி.க.

(ஒ-5)

★ ★ ★

தென்மராட்சி,ஏப்.3

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் இரு தினங்கள் கிளிநொச்சி இந்துக் கல்லூரி மைதானத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அரியரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இதேவேளை - மாவட்ட மட்ட உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் ஒன்பதாம் திகதி நடைபெறுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-5-117)

## ஸ்ரீவ்வோ நம்பிக்கை

சிட்னி,ஏப்.3

டெஸ்ட் கிரிக்கெட் தர வரிசையில முதலிடத்துக்கு ஆஸ்திரேலியா அணியைக் கொண்டுசெல்வதே எனது குறிக்கோள் என ஆஸ்திரேலிய டெஸ்ட் அணித் தலைவர் ஸ்ரீவ்வோ தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் போட்டித் தொடருக்காக நேற்றுமுன்தினம் மேற்கிந்தியத் தீவுகளுக்குப் புறப்படுமுன் சிட்னி விமான நிலையத்தில் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இறுதியாக தென்னாபிரிக்காவுடன நடைபெற்ற இரண்டு டெஸ்ட் தொடரிலும் ஆஸ்திரேலியா வெற்றி பெற்ற போதிலும், தென்னாபிரிக்காவே டெஸ்ட் தர வரிசையில் முதலிடத்தில் உள்ளது.

இந்நிலையில், மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 4 டெஸ்ட்கள் அடங்கிய தொடரைக் கைப்பற்றுவதன் மூலமே ஆஸ்திரேலிய அணி தரவரிசையில் முதலிடத்தைப் பிடிக்க முடியும். இல்லாதுவிட்டால் தொடர்ந்தும் இரண்டாவது இடத்திலேயே இருக்கும்.

இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் ஏப்ரல் 10 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இதேவேளை, உலகக் கிண்ணப் போட்டிகளின் போது படுகாயமடைந்த ஜேசன் பிலெஸ்பி தற்போது உடற்தகுதிபெற்றுள்ளார். கைவிரலில் காயமடைந்துள்ள துடுப்பாளர் டேமியன் மார்ட்டினும் குணமடைந்து விட்டால் அவர் அணியில் சேர்த்துக்கொள்ளப்படுவார் என்றார் ஸ்ரீவ்வோ. (ஒ-5)

# ஓய்வுபெறும் வரை தலைமை தாங்கத் தயார்!

## பிறையன் லாரா தெரிவிப்பு

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறும்வரை மேற்கிந்திய அணிகளுக்குத் தலைமை தாங்க விரும்புகிறேன்.

இவ்வாறு மேற்கிந்திய அணியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ள பிறையன் லாரா நேற்றுமுன்தினம் கூறினார்.

1998 முதல் 2000 ஆம் ஆண்டு வரை மேற்கிந்திய அணித் தலைவராகக் கடமையாற்றியவர் இவர். நியூஸிலாந்து சுற்றுலாவில் படுதோல்விகளைத் தழுவியபின் தலைமைப் பதவியிலிருந்து லாரா இராஜினாமாச செய்தார்.

ஆனால், கடந்த சனிக்கிழமை கார்ல்ஹூப்பருக்குப் பதிலாக புதிய தலைவராக நியமிக்கப்பட்டார்.

இது குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

அப்போது தலைமைப் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தமை சிறந்த தீர்மானம் என்றே கருதுகிறேன். தற்போது நான் மேலும் பக்குவம் அடைந்துள்ளேன்.

சந்தர்ப்பம் கிடைத்தால் ஓய்வு பெறும் வரை தலைவராக செயற்படுவதற்கு நான் தயார். ஆனால், அணியின் நன்மை கருதி மேற்கிந்தியக் கிரிக்கெட் சபையும் தேர்வுக் குழுவினருமே இது குறித்து தீர்மானிக்க வேண்டும்.

ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான போட்டிகள் மிகவும் சவாலானவையாக இருக்கும். எம்மைக் கூர் தீட்டிக்கொள்வதற்கு ஆஸ்திரேலியாவை விட சிறந்த எதிரணி வேறெதுவும் இல்லை.

இது எனக்குப் பெரும் சவால். இறுதியாக நாலுவருடங்களுக்கு முன் ஆஸ்திரேலிய அணி இங்கு வந்தது. அப்போது மேற்கிந்திய அணிக்கு நான் தலைமை தாங்கினேன். ஆனால் தற்போதைய சூழ்நிலை வித்தியாசமானதாக இருக்கும்.

- இவ்வாறு லாரா கூறினார். 33 வயதான லாரா இதுவரை 90 டெஸ்ட் போட்டிகளில் 7 ஆயிரத்து 572 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். சராசரி 49.49 ஆகும். (ஒ-5)

# திராவிட்டிற்குத் திருமணம்

இந்திய அணியின் உப தலைவர் ராகுல் திராவிட் தற்போது திருமணம் செய்துகொள்ள முடிவு செய்துள்ளார். அவர் நாக்பூரைச் சேர்ந்த விஜேதா பெண் டார்க்கர் என்ற வைத்தியரை மணமுடிக்கிறார். விஜேதாவின் அப்பா பெண்டார்க்கர் முன்னாள் இந்திய வெளியுறவுத் துறை அதிகாரி ஆவார்.

இது குறித்து பெண்டார்க்கர் கூறியதாவது:-

"திராவிட் குடும்பத்துடன் எங்களுக்கு நீண்ட கால தொடர்பு உண்டு. திராவிட்டிற்கும், விஜேதாவிற்கும் ஏற்கனவே நிச்சயதார்த்தம் முடிந்து விட்டது. திருமணம் எப்போது நடைபெறும் என்பது குறிப்பிடப்படாமல் இருந்தது.

இந்தநிலையில், இவர்கள் திருமணத்தை வருகின்ற மே மாதத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. திருமணம் எங்கு நடக்கும் என்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை - என்றார். (ஒ-5)

# வட்மோரின் பதவிக்காலம் மேலும் நீடிக்கப்படமாட்டாது!

## கட்டுப்பாட்டுச் சபை அறிவிப்பு

கொழும்பு,ஏப்.3

இலங்கைக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளர் டேவ் வட்மோரின் ஒப்பந்தக் காலம் மேலும் நீடிக்கப்படமாட்டாது என இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

வட்மோருக்கான ஒப்பந்தம் எதிர்வரும் மே மாதத்துடன் நிறைவடையவுள்ளது.

இலங்கையில் பிறந்த ஆஸ்திரேலியரான வட்மோர், பயிற்சியாளராக இருந்தபோது 1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை இலங்கை அணி கைப்பற்றியது. இதனையடுத்து வட்மோர் புகழடைந்தார்.

ஆனால், தற்போது முடிவடைந்துள்ள கிரிக்கெட் உலகக்கிண்ணப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியுற்றது. இதனால், வட்மோரை பயிற்சியாளர் பொறுப்பிலிருந்து விலக்க முடிவு செயயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வட்மோர் இலங்கை அணியில் நீண்ட காலமாகப் பயிற்சியாளராகக் கடமையாற்றிவிட்டார். புதிய சிந்தனையை வளர்க்கக்கூடிய பயிற்சியாளரைத் தேடி வருகின்றோம் என இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைமை நிர்வாகி அனுரா தென்னக்கோன் கடந்த திங்கட்கிழமை தெரிவித்தார்.

இதேவேளை, நீண்டகாலமாக இலங்கை அணியின் உடலியக்க நிபுணராக உள்ள அலெக்ஸ் கோன்டௌரியும் அந்தப் பொறுப்பிலிருந்து விலக்கப்படவுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது ஒரு புறமிருக்க இலங்கை அணி உலகக் கிண்ணப் போட்டிகளில் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து தனது கப்டன் பதவியை இராஜினாமாச் செய்வதாக ஜயசூரிய அறிவித்தார். எனினும், இவரது இராஜினாமாவை விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோ ஏற்றுக்கொள்ளவில்லை.

இதனால், இன்று முதல் 10ஆம் திகதி வரை சார்ஜாவில் நடைபெறும் 4 நாடுகள் பங்குபற்றும் கிரிக்கெட் போட்டிக்கும், ஏப்.25ஆம் திகதி முதல் இலங்கையில் நடைபெறவுள்ள நியூஸிலாந்துக்கு எதிரான தொடருக்கும் ஜயசூரியாவும், வட்மோரும் இணைந்து பணியாற்றுவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-5)




# தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயம்

## சகஸ்ர (1008) சங்காபிஷேக நிகழ்வு - 2003

முருகன் அடியார்களே!

நிகழும் சித்திரபானு வருடம் பங்குனி மாதம் 21 ஆம் நாள் 04.04.2003 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு சங்கு பூஜையும் 10.00 மணிக்கு அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து சண்முக அர்ச்சனையும் நடைபெறும். 11.00 மணியளவில் எம்பெருமான் வீதியுலா வருவார். முருகன் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகைதந்து கிரியா நிகழ்ச்சிகளில் கலந்து எம்பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

ஆலயத்தில் அன்று அன்னதானம் வழங்குதல் மிகவும் சிறப்பாக நடைபெறும்.

ஜெகநாதன் குழுவினரின் விஷேச மேளக் கச்சேரி இடம்பெறும்.

உபயம்: வே.முருகேசு சுவாமிகளின் அன்டர்களும், அடியார்களும்.

இப்படிக்கு,
பிரதமகுரு சிவஸ்ரீ ச.கந்தசாமி ஐயர்
உலக குருநாதஐயர் பிரதமகுரு
ஆலய உரிமையாளர்
செல்வச்சந்நிதி, தொண்டமானாறு.

(16289)



# கண்ணீர் அஞ்சலி

We Serve

எமது கழக அங்கத்தவரான
Lion து.கிரிதரன் அவர்களின்
அன்புத் தந்தையாரான
மா. துரைராஜா
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரும்பிராய் அரிமாக் கழகத்தலைவரும், உறுப்பினர்களும்.

(16284)



# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி பிறேமினி புருசோத்மன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி மகேஸ்வரி செல்லத்துரை
30.03.2003 அன்று இறைபதம் அடைந்தார். அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திப்பதோடு, எமது கண்ணீர் அஞ்சலியையும் தெரிவிக்கிறோம்.

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி

அதிபர், ஆசிரியர், மாணவர், ஊழியர்கள்.

(16290)

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 462 |
|---|---|
| திகதி | 01.04.2003 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல. 4848226-4863238

வெற்றி இலக்கங்கள் **08 09 45 49**



லக்கினம்
துலாம்

ஜக்பொட் பரிசு ரூபா. 1,708,850/- வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **2,452,850/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 333,294 | 10 | 3,332,940 |
| 2 இலக்கங்கள் | 30,500 | 20 | 610,000 |
| 1 இல + லக்கினம் | 30,274 | 30 | 908,220 |
| 2 இல + லக்கினம் | 2,850 | 100 | 285,000 |
| 3 இலக்கங்கள் | 829 | 500 | 414,500 |
| 3 இல + லக்கினம் | 63 | 5,000 | 315,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,708,850 | - |
| மொத்தம் | 397,814 | - | 6,265,660 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,265,660/-

தொடர் இல. 5840462க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 ஏப்ரில் 04ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, செயிற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, வந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பயன்படுத்த வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4851201-7-01
4860187-7-31
4858658-9-56
4860156-3-88
4852128-8-14


# சனசமூக நிலையங்களின் மேம்பாட்டுக்கு அபிவிருத்தி அலுவலர் உதவவேண்டும்!

## உள்ளூராட்சி உதவியாணையாளர் உரை

யாழ்ப்பாணம்,ஏப்.3

சமூகத்தில் பின்தங்கிய மட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்களை மேம்படுத்த சனசமூக அபிவிருத்தி அலுவலர்களும் உள்ளூராட்சி உதவியாளர்களும் முன்வரவேண்டும்.

இவ்வாறு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி. கிருஷ்ணசாமி கூறினார்.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை நடத்திய உள்ளூராட்சி உதவியாளர் - செயலாளர்களுக்கான கலந்துரையாடலில் உதவி ஆணையாளர் ரி.வி.கிருஸ்ணசாமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஏதோ ஒரு விதத்தில் தலைமைத்துவ பண்புகளை வளர்த்துக் கொள்ள உள்ளூராட்சி மன்றங்கள் உதவவேண்டும்.

மானிப்பாய் பிரதேச சபை திட்டமிடற்பிரிவு ஆயிரம் மரங்களை உள்ளூராட்சி வாரம் கொண்டாடப்பட்ட வேளையில் நட்டுள்ளது. அழிந்து வரும் காடுகளை மீளமைப்பு செய்வதற்கு இது உதவியாக இருக்கும்.

மேற்படி பிரதேச சபையின் முன்மாதிரியைக் கொண்டு ஏனைய சபைகளும் மரங்களை மீள்நடுகை செய்வதன் மூலம் பிரதேச வளர்ச்சிக்கு உதவவேண்டும் என்றார் அவர்.

மேற்படி கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பிரதேசசபைத் செயலாளர்கள், உள்ளூராட்சி உதவியாளர்கள், சனசமூக அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-185)

# வங்கி ஓய்வூதியர் சங்கத்தின் ஊக்கப் பரிசு பெறுவோர்

வடமாகாண வங்கி ஓய்வுதியர் நலன்புரிச் சங்கம் பலதுறைபட்டவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காக பரிசுத் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பரிசு பெறுபவர்களின் விவரம் வருமாறு:-

✪ 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை - வசில் சில்வெஸ்டர், சுந்தரம் தாரணி.

✪ ஜி.சீ.ஈ (சாதரண) பரீட்சை- இ.கேதார சர்மா, பா.அகலிகா, க.கோபிநாத், ம.மயூரா, வி.ஞானரூபன்

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை:- ஜெ.வாசுதேவன்.

✪ வங்கியாளர் இறுதிப்பரீட்சை கே.உலகநாதன், ஜி.சகாதேவன், எஸ். சிவபாதம், வி.ஏ.அச்சியகுமார், திருமதி யு.யோகராஜசிங்கம், வி.சிவாநந்தன், எஸ்.விமலச்சந்திரன், கே.சிறிபாஸ்கரன், கே.ஆனந்தராஜா, கே.பி. ஆனந்த நடேசன், ஈ.சிவராசா, என்.பாலசுப்பிரமணியம், திருமதி ஜே.வைரவநாதன், என்.சிவரட்ணம், ரி.ரகு, கே. ஆனந்தராஜா, ஏ.குகதாசன், எஸ்.நித்தியானந்தன், ஏ.திருநாவுக்கரசு, திருமதி ஜே.சிவப்பிரகாசம், ஆர்.சிவஞானசுந்தரம்பிள்ளை, எஸ்.சூரியகுமார், எஸ். இரவீந்திரா, கே.விவேகானந்தராஜா, டி.சிவராசா.

✪ முதன்மை வங்கியாளர் - 2002 - என்.சிவரட்ணம் (முகாமையாளர் இலங்கை வங்கி, யாழ்.2 ஆம் கிளை) (ஒ-3)

### பாடசாலைப் பரிசளிப்பு

கோப்பாய்,ஏப்3

உரும்பிராய் இந்துக்கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவும் ஸ்தாபகர் தினமும் கலையரங்கத் திறப்பு விழாவும் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி திறந்த கலையரங்கத்தில் கல்லூரி முதல்வர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக கல்லூரியின் லண்டன் பழைய மாணவர் சங்க தலைவர் து.செல்வராஜா கலந்கொள்வார். (ஒ-72)


# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையாளர்கள் சுயவிவரம், தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வருகை தரவும்.

நேர்காணல் நடைபெறும் இடம் :- ஆயப்பகுதி - நடுவப் பணியகம், கிளிநொச்சி.

காலம் :- 12.04.2003, மு.ப 10.00 மணி.

பணிநிலை :-

01. ஆய அலுவலர் (இருபாலாரும்)
02. ஆய உதவியாளர் (ஆண்கள்)
03. எழுதுநர் (ஆண்கள்)
04. தட்டெழுத்தாளர் (ஆண்கள்)
05. சமையலாளர் (ஆண்கள்)
06. சமையல் உதவியாளர் (ஆண்கள்)
07. பாதுகாப்புப் பணியாளர் (ஆண்கள்)
08. மொழிபெயர்ப்பாளர் (ஆண்கள்)

## கல்வித்தகைமை

பணிநிலை 01, 03 இற்கு க.பொ.த. (உ/த) சித்தியடைந்திருத்தல்.

பணிநிலை 02 இற்கு க.பொ.த. (சா/த) கற்றிருத்தல்.

பணிநிலை 04, இற்கு க.பொ.த. (சா/த) சித்தியடைந்திருப்பதோடு, தட்டச்சுச் சான்றிதழும் பெற்றிருத்தல்.

பணிநிலை 05 இற்கு உணவு வகைகளைத் தயாரிப்பதில் முன்னனுபவம் பெற்றிருத்தல்.

பணிநிலை 06 இற்கு 08 ஆம் வகுப்பு சித்தியடைந்திருத்தல்.

பணிநிலை 07 இற்கு தேகாரோக்கியமும் நன்நடத்தையும் உடைய பணியில் அனுபவமுடையவர் விரும்பத்தக்கது.

பணிநிலை 08 இற்கு தமிழ், ஆங்கிலம், சிங்களத்தில் சரளமாக உரையாடக் கூடியவர். எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

*சிறப்புச்சலுகை :- கவர்ச்சிகரமான ஊதியத்துடன் உணவு, தங்குமிடம், போக்குவரத்து வசதி செய்து தரப்படும்.*

ஆயம்,
நிதித்துறை,தமிழீழம்.

(சி27098)

## சீனக்கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தில்

# கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கை கவலையளிப்பதாக டக்ளஸ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.3

சீனக்கப்பல் தாக்கப்பட்ட விவகாரம் தொடர்பான இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் நடவடிக்கை தமக்கு கவலையளிப்பதாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளை கடுமையாக விமர்சித்து அவர் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இப்படித் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

முல்லைத்தீவு கடலில் கரையிலிருந்து சுமார் 16 கடல்மைல் தொலைவில் கடந்த மாதம் 20 ஆம் திகதியன்று இடம்பெற்ற சம்பவத்தை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு கையாண்ட விதம் தொடர்பாக ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

இச்சம்பவம் தொடர்பான தங்களின் விசாரணைகளின் போது ஆயுத பாணிகளான ஆண்கள் மற்றும் பெண்களை உள்ளடக்கியதும், இலங்கை மொழியில் பேசியவர்களுமான ஒரு குழுவே சீனப் படகு மீது தாக்குதல் நடத்தியுதாகத் தெரியவந்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள். இச்சம்பவத்தில் காயமடைந்தவரான பிரியந்த, தாக்குதல் நடத்தியவர்கள் தமிழ்மொழியில் பேசிக்கொண்டதாக தெரிவிக்கின்றார். தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த சீன மீனவர்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழியை வேறுபடுத்தி காணும் தகைமை அற்றவர்களாதலால் இலங்கை மொழியில் தமக்கிடையே பேசிக்கொண்டதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் இலங்கை மீனவரான பிரியந்த, தாக்குதல் நடத்தியோர் மூன்று படகுகளில் வந்ததாகக் குறிப்பிடும் அதேவேளை, சீன மீனவர்கள் எட்டுப் படகுகள் காணப்பட்டதாக தெரிவித்தனர். கடலில் தாக்குதலுக்கு இலக்காகி உயிருக்காக தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒருவர் தாக்குதலில் ஈடுபட்ட படகுகளின் தொகையை எண்ணுவது குறித்து கவலை கொண்டிருக்க முடியாது என்பது உணரப்பட வேண்டிய உண்மையாகும்.

போர்நிறுத்த கண்காணிப்பு குழுவானது புலிகளின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பகுதிகளில் விசாரணை நடத்த இயலாத கையறு நிலையில் இருக்கிறது. இதனை முன்னரும் பல தடவைகளில் நாம் சுட்டிக்காட்டியுள்ளோம். குறைந்தபட்சம் அங்குள்ள சாட்சியங்களை விசாரிப்பதற்குக் கூட கண்காணிப்புக்குழு உறுப்பினர்களுக்கு இயலவில்லை. புலிகளால் பயன்படுத்தப்படும் இறங்குதுறைகளுக்குச் சென்று பார்வையிட கண்காணிப்புக் குழுவுக்கு எந்த வழியும் இல்லை. இந்த இயலாமைகள் காரணமாக கண்காணிப்புக் குழு எந்தவொரு சம்பவம் தொடர்பிலும் பகிரங்கமான தீர்ப்புக் கூறுவது பொருத்தமற்றது ஆகும்.

கண்காணிப்புக் குழுவின் முடிவானது தாக்குதலில் உயிர் தப்பியவர்களின் சாட்சியத்தின் அடிப்படையில் யார் இந்தப் பயங்கரவாத செயல்களுக்குப் பொறுப்பென வரையறுத்துக் கூறமுடியாதுபோனாலும், இனந்தெரியாத ஆயுதபாணிகள் இதனைச் செய்திருப்பதாகக் கூறுகிறது. இது மறைமுகமாக புலிகளை நிரபராதிகளாக்குவதோடு, பயங்கரவாதச் செயல்களில் வேறு சில ஆயுதக்குழுக்கள் ஈடுபடுவதான சாத்தியத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது.

புலிகளைவிட வேறு ஆயுதக் குழுக்கள் செயற்படுவதாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் முடிவு புலப்படுத்துகிறது. கடந்த ஒரு வருடகாலத்தேயேனும் கவனமாக அவதானிக்கும் எவரும் புலிகளைத் தவிர வேறு எந்தக் குழுவும் ஆயுத பாணிகளாகச் செயற்படவில்லை; செயற்படவும் முடியாது என்பதைக் கண்டு கொள்வர்.

மேலும் இலங்கைக் கடற்படையைத் தவிர அதிவேக படகுகளைக் கொண்டிருக்கும் ஒரே சக்தி புலிகள் தான் என்பது அனைவரும் அறிந்தது. கடற்படையைத் தவிர இலங்கையைச் சூழவுள்ள கடற்பரப்பில் சுதந்திரமாக நடமாடும் சக்தி புலிகளுக்கு மட்டுந்தான் இருக்கிறது. முல்லைத்தீவுக் கடற்பரப்பில் ஆயுத பாணிகளாகத் துணிச்சலுடன் தாக்குதல் நடத்தும் வலிமை புலிகளுக்குத்தான் இருக்கிறது. இலங்கைப் படையினரைத் தவிர ஆயுதங்களைக் கையாண்டு வருபவர்களும் புலிகள் மட்டுமே. புலிகளின் கடற்பிரிவில் பல பெண்கள் இருக்கின்றார்கள் என்பதுடன் அவர்கள் நவீன ஆயுதங்களைக் கையாளும் பயிற்சி பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள்.

அப்பாவி மீனவர்கள் மீது தாக்குதல்கள் மற்றும் மிரட்டல்கள் மேற்கொள்வதற்குத் தேவையான பல காரணங்கள் புலிகளுக்குண்டு. மன்னார் மற்றும் முல்லைத்தீவுக் கடற் பரப்புகளில் மீனவர்களின் சுதந்திர நடமாட்டம் அதிகரிப்பது புலிகள் மேற்கொள்ளும் ஆயுதக் கடத்தல் மற்றும் போதைப்பொருள கடத்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பதாகும். மார்ச் 20இல் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சீன மீனவர்கள் தாக்குதலுக்கு இலக்கான சம்பவம், இதற்கு முன்பாக மன்னார் கடற்பரப்பில் தமிழக மீனவர்கள் இம்சைகளுக்கு இலக்கானமையை நினைவுபடுத்துவது ஆகும். இவை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அபத்தமான முடிவுகளை வெளிப்படுத்தி, குற்றங்களிலிருந்து புலிகளைக காப்பாற்றுவதற்கு முன்பாக கவனத்தில் கொள்ளவேண்டிய முக்கிய அம்சங்களாகும்.

கடந்த 31ஆம் திகதியன்று இலங்கையின் படைவீரர்களை ஏற்றிச் சென்ற லங்கா முடித்த கப்பல் தாக்குதலுக்கு இலக்கானமை மற்றுமொரு தெளிவான உதாரணமாகும். இதிலுங்கூட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் பொறுப்பற்ற வகையில் கருத்துத் தெரிவித்திருக்கிறார். எம்டி.வி. தொலைக்காட்சியின் ஏப்ரல் முதலாம் திகதிய நிகழ்ச்சிக்கு பேட்டியளித்த அவர், புலிகள் அல்லாத தமிழ் குழுக்கள் இச்சம்பவத்திற்குப் பொறுப்பாக இருக்கலாம் எனக் கூறியுள்ளார். இந்தக கருத்துத் தொடர்பாக நாம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். ஏனெனில், புலிகள் அல்லாத தமிழ் குழுக்களின் மீது அபாண்டமான, ஆதாரமற்ற குற்றச்சாட்டு இது என்பதால் ஆகும்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அபாண்டமான, ஆதாரமற்ற இத்தகைய முடிவுகள் புலிகள் பயங்கரவாதச் சம்பவங்களில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு ஊக்கமளிப்பதாகவே அமையும் என்பதைச் சுட்டிக்காட்டுவதில் மிகவும் கவலை அடைகிறோம்- என்றுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கும் இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதுவர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(ஒ-3)

### மருந்துகள் அன்பளிப்பு

சண்டிலிப்பாய்,ஏப்.3

வலி.மேற்கு பிரதேச சபையின் வட்டுக்கோட்டை கிராம உபஅலுவலகத்தில் செயற்பட்டு வரும் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கு வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் ஒருதொகுதி சித்த ஆயுர்வேத மருந்துகளை அன்பளிப்பு செய்துள்ளது. வாரத்தில் திங்கட்கிழமை, புதன்கிழமை ஆகிய இரு தினங்களில் மட்டும் இயங்கி வரும் இவ்வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வருவதை அறிந்த இச்சங்கத்தினர் ஒரு தொகுதி மருந்துகளைக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளனர். (ஒ-135)

### பாடசாலையில் தளபாடப் பற்றாக்குறை

சண்டிலிப்பாய்,ஏப்.3

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் தளபாடப் பற்றாக்குறை நிலவிவருகிறது. இதன் காரணமாக மாணவர்கள் நிலத்தில் இருந்து கற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை- வகுப்பறை கட்டடங்களும் போதுமானதாக இங்கு இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்யுமாறு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கடிதமூலம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக வித்தியாலய அதிபர் திருமதி சு.ஜெயவீரசிங்கம் தெரிவித்தார். (ஒ-135)

# நியாப் திட்டங்களை மேம்படுத்த துரித மதிப்பீட்டு நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் நியாப் திட்டங்கள் குறித்து துரிதமதிப்பீடு மேற்கொண்டு விவசாயிகளுக்கு முழுப்பயன் அளிக்கும் வகையில் அவற்றை மீள் வடிவமைக்கும் பணி நடைபெற்றுவருவதாக நியாப் திட்ட துரிதமதிப்பீட்டுக் குழுவின் தலைவர் பி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நியாப் திட்டத்தின் மையக் கிராமங்களைத் தெரிவு செய்யும் கோட்பாட்டை வடிவமைத்தல், கிராம மட்டத்தில் திட்ட முதலீட்டின் பல்வேறு அம்சங்களில் பொருத்தமான விகிதாசாரத்தை சிபார்சு செய்தல், குளங்கள், வெள்ள நீர்த்தடுப்பணைகள், வடிகால் வாய்க்கால்கள், உவர் நீர்தடுப்பு அணைகள் மற்றும் விவசாய கிணறுகள் முதலியவற்றில் ஏற்படும் நேரடி மறைமுக பலன்களை உறுதி செய்தல், பொருத்தமான அணுகுமுறையில் முன்னெடுத்தல், கிராமிய அடிமட்ட அமைப்புக்களின் பலம் பலவீனத்தை கணித்து தகுந்த அமைப்புக்களுக்கு திட்ட செயற்பாடுகளின் பொறுப்புகளை வழங்குதல், திட்டம் முடிவடைந்த பின்பு அது தொடர்பான நடவடிக்கைகள் குறித்து மேற்கொள்ள வேண்டிய ஒழுங்குகளை வகுத்தல் ஆகியவையே இந்த துரிதமதிப்பீட்டின் நோக்கங்கள் என்றும் அவர் கூறினார்.

யாழ்குடாநாட்டில் உள்ள விவசாயிகளுக்கு நன்மையளிக்கக் கூடியவகையில் மேற்படி விடயங்கள் பற்றி மக்களிடமும், அவர்கள் சார்ந்த குழுக்களிடமிருந்தும் கருத்துக்கள் சேகரிக்கப்படுவதாகவும் -

இது தொடர்பான கருத்துக்களை தெரிவிக்க விரும்புவோர் "தலைவர், துரித மதிப்பீட்டுக்குழு, 28, கோயில் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தெரிவிக்கலாமென்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.(ஒ-5)


*FORUT - Campaign for Development and Solidarity*

## Vacancy Announcement

**Title** : Project Coordinators (2) - Capacity Development (1), Rehabilitation (1)

**Duty Station** : Kilinochchi, with travel within north and east

**Effective date** : Immediately

**Duties and Responsibilities**

★ To assume operational responsibilities for coordinating a large scale training/ rehabilitation program in mul - tiple districts.
★ To closely monitor and evaluate the performance of programs/training to governmental and non - governmental staff involved in rehabilitation work.
★ To provide monitoring reports and guidance to implementing stakeholders.
★ Ensure the timely and effective outcomes of the projects according to the program plans.
★ Liaise closely with the project manager and submit timely and accurate financial and performance reports in accordance with organization and donor requirements.
★ Provide support to other FORUT Vanni projects.
★ Assist in strategic and all aspects of project planning and supervise junior field staff.

**Qualification requirements: Education and skills.**

★ University degree in Business, Finance, Engineering, Economics or Social Sciences.
★ Computer literate: Working knowledge of MS word, excel and Access.
★ Qualitative and quantitative research and analysis skills, knowledge of participatory approaches.
★ Strong report writing skills.
★ Must be a team player with ability to work without direct supervision.

**Experience Essential**

★ Minimum 3 years work experience in governmental, non - governmental or educational environment at a similar senior level.

**Experience Desirable**

★ Design and implementation of training and research programs.

**Language**

★ Tamil and good standard of written and spoken English.

**Additional Competencies**

★ Good policy analysis and strategic thinking.
★ Ability to work with senior persons with a consensus building approach.
★ Able to work under uncertain conditions.

FORUT is an International non - governmental organizations committed to humanitarian principles and temperance. Staff will be expected to act in accordance with these values at all times. Applicants should send a detailed C.V. of no more than three pages, and include two work/ academic references. A one page covering note should be attached outlining how the applicant can contribute to the work of FORUT. Please send applications to The Project Manager Vanni FORUT,

**CTB Depot Road, Selvanagar, Kilinochchi.**

**No. 88, 3rd lane Off Kandy Road, Temple View, Vavuniya.**

**No. 67, Temple Road, Jaffna.**

**98\4, Havelock Road, Colombo 05.**

(C/27090)



உ

## நன்றி நவிலல்

சென்ற 27-03-2003 அன்று சிறுப்பிட்டியில் இடம்பெற்ற

"கிருபாகரசர்மா-சங்கீதா"

தம்பதியினரின் திருமண வைபவத்தின் போது கலந்து சிறப்பித்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதோடு, குறிப்பாக சரீர மற்றும் பொருளுதவிகள் புரிந்த சிறுப்பிட்டி வாழ் மக்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

*செல்லப்பிள்ளையார் ஆலயம்,*
*சிறுப்பிட்டி தெற்கு,*
*நீர்வேலி.*

ச.கண்ணன் சர்மா
குடும்பத்தினர்.

(16280)



## நெஞ்சம் உருகும் திங்கள் ஒன்றிலே...

தாயின் மடியில் 11 - 02 - 1936



ஆண்டவன் அடியில் 04 - 03 - 2003

அமரர்

### நாகமுத்து செல்லத்துரை

உய்யும் வழி இதுவென்று
மெய்யறிவு ஊட்டி!
பெய்யும் மழையாய்
அன்பு பொழிந்து
திங்கள் ஒன்று ஆனபோதும்
ஆறவில்லை எம்துயர்!
அஞ்சலிகள் செய்கின்றோம்
உங்கள் ஆன்மா நலம் பெறவே!

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*கைதடி மேற்கு,*
*கைதடி.*

மனைவி, பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

(16272)



## தவறிவிட்டது

சு.மணிராஜா என்பவரின் கையடக்க தொலைபேசி செவ்வாய்க்கிழமை (01.04.2003) யாழ். நகரில் இருந்து கைதடி சாவகச்சேரியூடாக கொடிகாமம் செல்லும் வழியில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள்:

இல. 83/7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

என்னும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

T.P: 021 222 2821, 021 222 3216

தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(16278)

## 10 கோடி ரூபா மோசடி

# மத்திய மாகாண கல்வித் திணைக்கள அதிகாரிகள் நால்வர் விரைவில் கைது!

கொழும்பு,ஏப்.3

மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தில் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படும் 10 கோடி ரூபா மோசடி சம்பந்தமாக அத்திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் நால்வர் கைது செய்யப்படவிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

இந்நால்வருக்கு எதிராகப் போதிய சாட்சியங்கள் கிடைத்திருக்கின்றன என்று குற்ற விசாரணைப் பிரிவுப் பொலீஸார் தெரிவித்திருக் கின்றனர்.

இம்மோசடி குறித்து விசாரணை நடத்திவரும் விசேட பொலீஸ் குழு இதுவரை கல்வியோடு தொடர்புபட்ட 100 இற்கு மேற்பட்டோரை விசாரணை செய்திருக்கின்றது. (எ)

# களுத்துறைக் கைதிகளின் வழக்குகள் துரித விசாரணைக்கு ஒத்துழையுங்கள்

### பிரதம நீதியரசர் சகல தரப்பினரிடமும் கோரிக்கை

கொழும்பு,ஏப்.3

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சகல தமிழ் அரசியல் கைதிகளினதும் வழக்குகள் காலதாமதமின்றி விசாரணை செய்யப்பட சம்பந்தப்பட்ட சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியம் என்று பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்திருக்கிறார்.

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளின் வழக்குகளை விசாரணை செய்வதில் காலதாமதம் ஏற்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுவரும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகவே பிரதம நீதியரசர் இக்கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரையில், இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருப்போரின வழக்குகளைத் துரிதமாக விசாரணை செய்யுமாறு கேட்கப்பட்டிருக்கிறது எனவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

தற்பொழுது 84 தமிழ்க் கைதிகள பற்றிய வழக்குகளே விசாரணைக்காக எஞ்சியுள்ளன. (எ)

# சமய சந்நிதிகளில்

காரைநகர்,ஏப்.3

காரைநகர் கருங்காலி முருகமூர்த்தி கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா எதிர்வரும் 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 11 மணிக்கும், தீர்த்தத திருவிழா மறுநாள் அதிகாலை 5 மணிக்கு வியாவில் ஐயனார் ஆலய தீர்த்தக்கரையிலும் இடம்பெறும். (எ-73)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்.அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

தினமும் வசந்த மண்டபப் பூசை முற்பகல் 8.30 மணிக்கும், மாலை 5.15 மணிக்கும் நடைபெறும். (எ-6)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.3

நயினாதீவு, செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில் வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

தினமும் வசந்த மண்டபப் பூசை பகல் 11 மணிக்கும், இரவு 9 மணிக்கும் நடைபெறும். (எ-6)


யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்
பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணம்

எமது வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் 06.04.2003 பி.ப. 2மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அனைத்துப் பழைய மாணவர்களும் இக்கூட்டத்துக்கு தவறாது சமுகமளிக்கவும்.

அதிபர்,
யா/கொழும்புத்துறை இ.ம.வி.
(16291)



வேலைக்கு ஆள்கள் தேவை

Computer Hardware தெரிந்த ஒருவரும், இலத்திரனியல் பொருள்களை விற்பனை செய்யக்கூடிய ஒருவரும் தேவை.

தொடர்பு:- கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்
இல.64, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (16293)



சேவை நலன் பாராட்டுதல்



ஆசிரியப் பணியில் 35 வருடங்கள் சேவையாற்றி இன்று (03.04.2003) ஓய்வுபெறும் மனையியல் ஆசிரியர்
செல்வி தனேஸ்வரி தர்மராஜா
அவர்கள் ஓய்வுக் காலத்தில் சிறப்பாக வாழ எமது ஆசிரியர் கழகம் பாராட்டி வாழ்த்துகிறது.

ஆசிரியர் கழகம்,
யா/செங்குந்த இந்துக் கல்லூரி,
திருநெல்வேலி கிழக்கு.
(சி-27107)



உ
புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் சித்திரபானு வருஷம் பங்குனி மாதம் 20 ஆம் நாள் (03.04.2003) வியாழக்கிழமை காலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரையுள்ள அச்சுவினி நட்சத்திரத்துடன் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்,

எம்மால் ஆரம்பிக்கப்படவுள்ள
ஆர்த்தி ரெக்ஸ்
என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்க உள்ளோம், அத்தருணம் தாங்கள் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

33, நவீன சந்தை (உட்புறம்),
யாழ்ப்பாணம்.
(16288)

இங்ஙனம்
'தங்கள் நல்வரவை நாடும்'
ஸ்தாபனத்தினர்.


## இயக்கத்தில் இணையச் சென்ற சிறுமிகள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

விடுதலைப் புலிகள் இயக்கத்தில இணையச்சென்ற இரண்டு சிறுமிகள் நேற்று கிளிநொச்சி அரசியல்துறை அலுவலகத்தில் வைத்து அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மேற்படி சிறுமிகள் சங்கானை மற்றும் திருநெல்வேலிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## புறாப்பிடிப்பதற்கென தேர்முட்டிமீது ஏறிய சிறுவன் தவறிவீழ்ந்து மரணம் !

காரைநகர்,ஏப்.3

புறாப் பிடிப்பதற்காக ஆலயத் தேர்முட்டியில் ஏறிய மாணவன் ஒருவன் தவறிவீழ்ந்து பரிதாபகரமாக உயிரிழந்தான். காரைநகர் மருதடிப் பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில் தரம் 8 இல் கல்வி பயிலும் கா.சுதாகரன் (வயது 13) என்ற மாணவனே உயிரிழந்துள்ளார். (எ-73-15)

## பரீட்சை மேற்பார்வையாளர் அறிவுறுத்தல் கூட்டம்

குருநகர்,ஏப்.3

இம்மாதம் நடைபெறவுள்ள ஜி.ச.ஈ. உயர்தரப் பரீட்சையில் பரீட்சை இணைப்பு அலுவலர், உதவி இணைப்பு அலுவலர், பரீட்சை மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்களாகக் கடமைபுரிய நியமிக்கப்பட்டுள்ளவர்களுக்கான அறிவுறுத்தல் கூட்டங்கள் நாளைமறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறவுள்ளன.

யாழ்நல்லூர் கோட்டப் பாடசாலைகள் மற்றும் தென்மராட்சி, தீவக வலய பாடசாலைகளைச் சேர்ந்த பரீட்சை அலுவலர்களுக்கான பரீட்சை அறிவுறுத்தல் கூட்டம் 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் -

வடமராட்சி, வலிகாமம் வலயப் பாடசாலைகள் மற்றும் கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்தவர்களுக்கான கூட்டம் 6ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் நடைபெறவுள்ளது. (எ-51)

## கசிப்பு வழக்கில் அபராதம் விதிப்பு

கசிப்பு வைத்திருந்தமை மற்றும் விற்பனையில் ஈடுபட்டமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் இருவருக்கு யாழ். நீதிமன்றினால் 31 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ். லெப்பை ஒழுங்கையைச் சேர்ந்த தர்மலிங்கம் ஜினதாஸ் என்பவருக்கு 20ஆயிரம் ரூபா தண்டப் பணமும் 2 ஆயிரம் ரூபா தர்மப் பணமும் - கொழும்புத்துறை, நெடுங்குளம் வீதியைச் சேர்ந்த திசைவீரசிங்கம் யோகரத்தினம் என்பவருக்கு 8ஆயிரம் ரூபா தண்டப்பணமும் ஆயிரம் ரூபா தர்மப் பணமும் - தண்டனையாக விதித்து யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளார். (ஒ-10)


லக்சுமி இணுவில்
பார்த்திபன், திவ்வியா உன்னி, ரஞ்சித், வடிவேலு நடித்த
சபாஷ் (ரீலஸ்)
தினசரி 11.00, 3.00, 7.00 (டி.நேரம்)

நிர்மலஞ்சனாஸ் சங்கானை
சத்தியராஜ், குஷ்பு நடித்த
உன்னைக் கண்தேடுதே
நேரம் : 11.00, 2.45, 6.00 (டி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45மணிக்காட்சி
HOLLOW MAN
6 ஆம் திகதிமுதல் JURASSIC PARK III

ராஜா யாழ்ப்பாணம்
ஸ்ரீகாந்த், பூமிகா, விவேக், ராதிகா
ரோஜாக்கூட்டம்
10.30, 2.30, 6.30
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.10 இற்கும்

நாகம்ஸ் சுன்னாகம்
விஜய், ஸ்நேகா, ரகுவரன் நடித்த
வசீகரா (ரீலஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (ப.நேரம்)
இரவு 7.00 மணி காட்சியாக
RUSH HOUR (16241)







யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் 11 ஆவது வருடாந்த அமர்வு நேற்று யாழ். பல்கலைக்கழக நூலக மண்டபத்தில் ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு ஆய்வுரை வழங்கிய ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக உயிர் இரசாயனவியற் துறைத் தலைவர் பேராசிரியர் ஜான்ஸ், நடுவில் அமர்ந்திருக்கிறார். இவருக்கு 'பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியம் தங்கப்பதக்க விருது' வழங்கப்பட்டது.

நிகழ்வுக்குத் தலைமை வகித்த முன்னாள் யாழ். இந்துக் கல்லூரி அதிபர் பஞ்சலிங்கமும் அமர்ந்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடாதிபதி கே.குமாரவேல் நன்றியுரை வழங்குகிறார். நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரை அடுத்துள்ள படத்தில் காணலாம். (படங்கள்: ரமணன்)

# அரசு - புலிகள் உடன்படிக்கைகளின் பின்பே பொருளாதாரம் கட்டி எழுப்பப்பட்டது

### ஆசிய தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் அமைச்சர் சமரசிங்க உரை

கொழும்பு,ஏப்.3

வீழ்ச்சியின் அடிமட்டத்திற்கே சென்றிருந்த இலங்கையின் பொருளாதாரம் அரசும் புலிகளும் செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையின் பின்னரே கட்டி எழுப்பப்பட்டுள்ளது. அந்த உடன்படிக்கை ஒரு திருப்புமுனையாகும். உடன்படிக்கையின் பின் உல்லாசப் பிரயாணிகளின் வருகை பெருமளவு அதிகரித்துள்ளது. வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களின மூலம் கிடைக்கு அன்னியச்செலவாணி அதிகரித்துள்ளது என்று தொழில், தொழில் வாய்ப்புக்கள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறினார்.

நேற்றுக் காலை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆசிய பிராந்திய நாடுகளின் தொழில் அமைச்சர்கள் மாநாட்டை அங்குரார்ப்பணம் செய்து உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதமரின் சார்பில் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் வாழ்த்துச செய்தியை வாசித்தார். அமைச்சர்களான டிரோன் பெர்னாண்டோ, டபிள்யூ. கே.எம்.லொக்குபண்டார, ஜோன் அமரதுங்க, ரவூப் ஹக்கீம், ரி.மகேஸ்வரன் ஆகியோரும் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி, உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அமைச்சர் மஹிந்தசமரசிங்க மேலும் பேசுகையில்:-

அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு ஆசிய பிராந்திய நாடுகளில் இன்று சென்று பணி புரிபவர்கள் எதிர்நோக்கும பிரச்சினைகளை ஆராய்ந்து அத் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்கவேண்டியது ஆசிய நாடுகளின் கடமையாகும் - என்றார். (எ)


கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திரு.து.கோணேஸ்வரன் அவர்களின் அன்புத் தந்தையார்
மா.துரைராஜா
அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அச்செழு,
நீர்வேலி. (16287)

ஆசிரியர் கழகம்,
யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்.



மரண அறிவித்தல்

இராமலிங்கம் பொன்னம்பலம் (பரமு)

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் - பொன்னம்பலம் நேற்று (02.04.2003) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பராசக்தி, புஸ்பவதி ஆகியோரின் அன்புக் கணவரும் ஜெகநாதன், இராமஜெயம் (லண்டன்), தெய்வநாயகி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் கோவிந்து, கண்மணி, பொன்னம்மா மற்றும் பொன்னையா, கந்தையா ஆகியோரின் சகோதரரும் கோபாலலிங்கம் (காசாளர், ஊர்காவற்றுறை, ப.நோ.கூ.ச.), ஞான உதயமலர், சந்திரா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் நர்மதா, நிவேதிகா, ஜனார்த்தனன் (லண்டன்), ஆதித்தன் (லண்டன்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2003) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இலக்கம் 54, K.K.S. வீதியில் உள்ள அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 54, K.K.S. வீதி,
கொக்குவில்.
(16295)

தகவல்:
ஜெகநாதன் (மகன்).

# நோர்வே இராணுவப் பயிற்சி முகாமுக்கு புலிகளின் அரசியல் குழுவினர் விஜயம்

ஒஸ்லோ,ஏப்.3

வெளிநாடுகளில் உள்ள அரசியல் கட்டமைப்புகள் மற்றும் சமஷ்டி முறைகள் குறித்து அறிந்துகொள்வதற்காக வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர், நோர்வேயில் பல சந்திப்புக்களை நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நோர்வேயின் தற்பாதுகாப்பு இராணுவப் பயிற்சி முகாம் ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்ட இந்தக் குழுவினர் அங்கு இராணுவக் கட்டமைப்பு மற்றும் தற்பாதுகாப்பு இராணுவப் பயிற்சி என்பன குறித்து அறிந்துகொண்டனர்.

நாட்டின் பாதுகாப்பிற்காக நோர்வே அரசு தனது மக்களுக்கு இராணுவப் பயிற்சியை வழங்குவது போலவே ஈழத்திலும் இன்றைய சமாதான சூழலில் புலிகள் தமது மக்களுக்கு தற்பாதுகாப்பு இராணுவப் பயிற்சியை வழங்கமுடியுமா என்பது பற்றி ஆலோசிப்பதற்காகவே இந்த இராணுவப் பயிற்சி முகாமுக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர் என்று நோர்வேயின் அரச தொலைக்காட்சி நிறுவனம் தெரிவித்தது.

இதேவேளை -

புலிகளின் அரசியல் குழுவினர் பின்லாந்து, சுவீடன், டென்மார்க் ஆகிய நாடுகளுக்கும் சென்று அங்குள்ள சமஷ்டி முறைமை மற்றும் இராணுவக் கட்டமைப்புகள் குறித்து ஆராயவுள்ளனர்.

(ஐ-4)

# திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள், சிறப்புரைகள், கருத்துரைகள் என்பன இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம், வன்னி, மலையகம், மட்டக்களப்பு, தென்னிலங்கை ஆகிய பகுதிகளில் இருந்தும் வருகை தரவுள்ள கலைஞர்கள், பேராளர்கள் தங்குவதற்குரிய அனைத்து ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன.

ஈழத்தின் எழுத்தாளர்கள், கலைஞர்களின் சங்கமிப்பாக நிகழ்ந்த மானிடத்தின் தமிழ்க்கூடல் நிகழ்ச்சியின் இரண்டாம் கட்ட நிகழ்வாக நடைபெறவுள்ள 'இசை, நடன, நாடக விழாவின்' முக்கிய நிகழ்ச்சிகளாகப் பின்வருவன மேடையேற்றப்படவுள்ளன.

வாத்திய இசை நிகழ்ச்சிகளாக, ஈழத்தின் தலைசிறந்த நாதஸ்வர மேதைகளின் நாதஸ்வரம், இசைஞான திலகம் மு.இராதாகிருஷ்ணனின் வயலினிசை, மட்டக்களப்பு விபுலானந்தா இசை, நடனக் கல்லூரி மாணவர்களின் 'வாத்யப் பிருந்தா' என்பனவும், வாய்ப்பாட்டு இசை நிகழ்ச்சிகளில் சாகித்திய இசைப் பேரரசு எம்.வி.என். நவரட்ணம், இசைக்கலைமணி திருமதி பிரியதர்சினி ஜெகதீஸ்வரன், சங்கீத ரத்னம் ஞானகுமாரி சிவநேசன், ஹம்சத்வனி பாஸ்கரன், சங்கீதபூஷணம் பொன்.குமாரசாமி, இசைமணி தவநாதன் றொபேட், சங்கீத பூஷணம் எஸ்.பத்மலிங்கம் ஆகிய ஈழத்தின் புகழ்பூத்த கலைஞர்கள் பங்குகொள்கின்றனர்.

இவற்றுடன், தமிழ்பேசும் மக்களின் கிராமிய பாரம்பரிய வாழ்வியலைப் புலப்படுத்தும் திருமலைக் கலைஞர் எஸ்.டொமினிக் குழுவினரின் 'கிராமிய இசைத் தென்றல்' நிகழ்ச்சியும், பவானி குகப்பிரியாவின் நெறியாள்கையில் திருகோணமலை ஸ்ரீசன்முகா இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் 'காவடி நடனம்', ஷர்மிளா கொனொரைராவின் மட்டக்களப்பு விபுலானந்தா இசை நடனக் கல்லூரி மாணவிகள் வழங்கும் 'எரிமலைகள்' நாட்டிய நாடகம் என்பனவும் -

இராமநாதன் நுண்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கிருஷாநதி ரவீந்திராவின் சிறப்பு நடன நிகழ்ச்சியான 'நாட்டியாஞ்சலியும்' மேடையேற்றப்படவுள்ளன.

இலங்கையின் பல பாகங்களிலும் பல்லாயிரக்கணக்கான தடவைகள் மேடையேற்றப்பட்ட பேராசிரியர் சரத் சந்திராவின் 'மனமே', ஆக்கிரமிப்புப் படையினரின் செய்கைகளால் விளையும் போர் அனர்த்தங்களை விளங்கும் தர்மஸ்ரீ பண்டாரநாயகாவின் 'றோஜனத்துப் பெண்கள்', திருமலைக் கலாமன்றத்தின் திருமலைக் கலைஞர்கள் இணைந்து வழங்கும் 'கூடித்துயர் வெல்', நூற்றுக்கும் மேற்பட்ட தடவைகள் மேடையேற்றப்பட்டு பல்லாயிரக் கணக்கான மக்களின் பாராட்டுக்களைப் பெற்று மனித அவலங்களின் உணர்வுகளை வெளிக்காட்டும் புதுவை அன்பனின் புரட்சிப் பறவைகள் வழங்கும் 'கரைதேடும் ஓடங்கள்', மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரிக் கலைஞர்கள் வழங்கும் எம்.பி.ரவீந்திராவின் 'நெருப்புக்குள் வாழ்வு', கலைக் கல்லூரிக் கலைஞர்கள் வழங்கும் என். பாலாவின் 'இரத்த நதியில் பூத்த வெள்ளை ரோஜா', தேவானந்தாவின் 'அக்கினிப் பெருமூச்சு' ஆகிய நாடகங்களும், பல்லாயிரக் கணக்கான ரசிகர்களின் பாராட்டைப் பெற்ற தமிழீழ விடுதலை இசைக்குழுவினரின் 'தாயக இராகங்கள்'சிறப்பு இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன - என்று அதில் உள்ளது.

(எ)


பொருளியற் கல்லூரி
நாவலர்வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2004
வணிகக் கல்வி
பகுதி II
ஆரம்பம் : 05.04.2003 10.00
By : V.Muralee B.B.A. (F.m.SPl.)


## ஈராக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈராக்குடன் சமாதானம் பேச வேண்டிய அவசியமோ திட்டமோ எங்களிடம் இல்லை. சதாம் ஹுசைன் நிபந்தனையில்லாமல் சரணடைந்தால் மட்டுமே போரை நிறுத்துவோம். போரின் முடிவில் சதாமின் ஆட்சி ஒழிக்கப்படும்.

சமாதான உடன்படிக்கை, பேச்சு போன்றவை எல்லாம் சாத்தியமே இல்லை. இது போன்ற புரளிகளை ஈராக்தான் பரப்பி வருகின்றது. ரி.வியில் தோன்றுவதாகக் கூறிவிட்டு தனது தகவல்துறை அமைச்சரைவிட்டு தனது செய்தியை ரி.வியில் படிக்க வைத்துள்ளார் சதாம் என்று அவர் தெரிவித்தார்.

(ஐ)

## நடிகை ஐஸ்வர்யா விபத்தில் காயம்!



மும்பாய்,ஏப்.3

உலக அழகியும் பிரபல திரைப்பட நட்சத்திரமுமாகிய ஐஸ்வர்யா ராய் நேற்று மும்பாயில் வீதி விபத்தொன்றில் படுகாயமடைந்தார்.

'ஹாகி' என்ற இந்திப் படத்தின் படப்பிடிப்பில் கலந்துகொள்வதற்காக ஜீப்பில் சென்ற சமயம் ஜீப் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

விபத்தினால் ஐஸ்வர்யாவின் இடது காலில் முறிவு ஏற்பட்டது. அவரது உயிருக்கு ஆபத்து இல்லை என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

'ஹாகி' (Khaki) என்ற திரைப்படத்தில் ஐஸ்வர்யா ராய் பிரபல இந்தி நடிகர் அமிதாப்பச்சனுடன் நடிக்கிறார்.

(ஐ)

## உதைபந்தாட்ட பயிற்சி முகாம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்.உதைபந்தாட்ட லீக்கினால் நாளை முதல் மூன்று தினங்களுக்கு பாடசாலை ஆசிரியர்களுக்கு நடத்தப்படவிருந்த உதைபந்தாட்டப் பயிற்சி முகாம் இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் அன்ரனிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி முகாமில் கலந்துகொள்வதற்காக வருகை தரவிருந்த இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் அதிகாரிகளின் விஜயம் தாமதமாவதாலேயே பயிற்சி முகாம் பிற்போடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-6)

# யாழ்.மாநகர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அ.விநாயகமூர்த்தி, சிவாஜிலிங்கம், ஜோசப் பரராஜசிங்கம், இரா.சம்பந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர். சுமார் ஒரு மணிநேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது.

யாழ்.நகரின் மத்தியில் அமைக்கப்பட்டுவரும் இராணுவத் தளத்தால் மக்களுக்கு ஏற்படக்கூடிய அசௌகரியங்களை தமிழ் எம்.பிகள் விலாவாரியாக அங்கு எடுத்துக்கூறினர்.

அப்போது யாழ்நகரின் வேறு எந்த இடத்தில் இராணுவத் தளத்தை அமைக்கலாம் என்பது குறித்து எம்.பிக்களிடம் அரசுத் தரப்பினர் ஆலோசனை கோரியதாகத் தெரியவருகின்றது.

யாழ்.பண்ணைக்கு அப்பால் காக்கைத்தீவுப் பிரதேசத்தை எம்.பிக்கள் முதலில் பிரேரித்தனர்.

காக்கைதீவுப் பகுதி மிகவும் தாழ்ந்த நிலப்பிரதேசம் அங்கு இராணுவத் தளத்தை அமைத்தால் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி இராணுவத்தினர் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வர். எனவே அந்தப் பிரதேசம் இராணுவத் தளம் அமைக்கச் சாத்தியமானது அல்ல என்றும் அரசுத் தரப்பில் கூறப்பட்டது.

அதற்கு அப்பால் கல்லுண்டாய் வெளிப் பிரதேசத்தில் தளத்தை அமைக்கும் மாற்று யோசனையை தமிழ் எம்.பிக்கள் முன்வைத்தனர்.

அந்தத் தெரிவு குறித்து அரசுத் தரப்பு ஓரளவு திருப்தி தெரிவித்தது. ஆனால் கல்லுண்டாய் பிரதேசம் முழுவதும் யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதி அல்ல என்பதால் அது பொருத்தமற்றது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடத்தில் - யாழ்.மாநகர சபை எல்லையினுள் - இராணுவத் தளத்தை அமைப்பதையே தாங்கள் விரும்புவதாக அரசுத் தரப்பில் பதிலளிக்கப்பட்டது.

அதற்குப் பொருத்தமான மாற்று இடத்தை நேரில் பார்த்து தெரிவு செய்வதற்காக இராணுவத் தளபதி உட்பட உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் தமிழ் எம்.பிக்கள் அடங்கிய குழு ஒன்றை எதிர்வரும் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பவும் நேற்றைய கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

(ஐ)

# பொலீஸார் - பொதுமக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் அலுவலகங்களுக்கும் விஜயம் செய்து சீரழிந்துபோயுள்ள பொலீஸ் திணைக்களத்தின் தரத்தை படிப்படியாக மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். குறிப்பாக பொதுமக்களுடன் நல்லுறவைப் பேணும் வகையில் நாட்டில் உள்ள சகல பொலீஸ் நிலையங்களிலும் அப்பிரதேசப் பொதுமக்களுடன் தினமும் தொடர்புகொள்வதற்கு பொறுப்பாக பொலீஸ் அதிகாரி ஒருவர் நியமிக்கப்படுவார்.

பொலீஸ் குற்றத்தடுப்புப் பிரிவிலும் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. குற்றத் தடுப்புக்கு மட்டும் - தனியான பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

சகல பொலீஸ் நிலையங்களிலும், தமிழிலும் பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன. தமிழ் தெரிந்த பொலீஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனினும், வடபகுதி பொலீஸ் நிலையங்களில் கடமையில் ஈடுபடத் தமிழ்ப் பொலீஸார் சிலர் பின்னடித்து வருகின்றனர்.

தற்போது பொலீஸ் ஆட்சேர்ப்புக்கென வெளியிடப்பட்ட வர்த்தமாணி அறிவித்தலின் பிரகாரம், விண்ணப்பித்துள்ள தகுதியான தமிழர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தெரிவு செய்யப்படும் சகலருக்கும் சகோதர மொழியாக தமிழ் அல்லது சிங்களம் கற்பிக்கப்படும்.

குடாநாட்டுப் பத்திரிகையாளர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணிக்கொள்ளுமாறு சகல பொலீஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. செய்தியாளர்களுடன் குறைந்தது ஒரு மாதத்துக்கு ஒரு தடவையேனும் சந்தித்து கலந்துரையாடுமாறு வடமாகாண சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கடந்த நாள்களில் இடம்பெற்றது போன்ற சில துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் இனியும் இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்களின் விவரங்களைப் பொலீஸார் சேகரித்து வருவதாக குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டன. ஊடகவியலாளர்களுடன் பொலீஸார் நெருங்கிய தொடர்பையும், புரிந்துணர்வையும் பேணிக்கொள்ள வசதியாக அவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டன என்ற உண்மை பலராலும் அறியப்பட்டிருக்கவில்லை.

யாழ்.குடாநாட்டில் சாரதி அனுமதிப் பத்திரம் சோதனை தொடர்பாக நெகிழ்ச்சிப் போக்கு கடைப்பிடிக்கப்படுகிறது. எனினும், போக்குவரத்து முகாமைத்துவம் தொடர்பாக ஆழமான ஈடுபாடு காட்ட வேண்டிய தேவையும் அவசியமும் இங்கு காணப்படுகிறது. ஆயினும், பொலீஸாரின் இந்தப் பணிகளில் படையினர் ஈடுபடுவது அனுமதிக்கப்படமாட்டாது.

நெடுந்தீவில் பொலீஸாரின் செயற்பாடுகள் தொடர்பாக அண்மைக் காலத்தில் குற்றச்சாட்டுகள் எழுந்தன. அங்குள்ள பொலீஸார், தமிழில் பதிவுகளை மேற்கொண்டு வருவதை நான் சோதித்து உறுதி செய்தேன். பொலீஸார் எந்தக் கட்சிக்கும் சார்பானவர்கள் அல்லர். சில அரசியல்வாதிகள் பொலீஸாருடன் நெருங்கிப் பழகுவது அத்தகைய தவறான பார்வையைப் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்திவிடலாம்.

பொது மக்கள் தமது பிரச்சினைகள் தொடர்பில் பொலீஸ் உயர் அதிகாரிகளை அணுகித் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

- இவ்வாறு பொலீஸ்மா அதிபர் தெரிவித்தார்.

பொலீஸ்மா அதிபர் நேற்று காங்கேசன்துறை, பருத்தித்துறை ஆகிய பகுதிகளில் உள்ள பொலீஸ் நிலையங்களுக்கும் நேரில் சென்று பார்வையிட்டார். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு அவர் விஜயம் செய்தார். பாடசாலை அதிபர் எஸ்.பத்மநாதன், உதவி அதிபர் என்.குணசீலன் ஆகியோருடன் கலந்துரையாடினார்.

பொலீஸ்மா அதிபராகப் பதவியேற்ற பின்னர் ஆனந்தராஜா யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்தது இதுவே முதல்முறை.

(ஐ-9-70)




வெளியாகியது!
A/L 2003 பரீட்சையை எதிர்நோக்கும் மாணவர்களுக்காக
GENERAL ENGLISH
★ முற்றிலும் எதிர்பார்க்கும் மாதிரி வினாத்தாள் விடைகளுடன்
★ கடந்த கால (2001/2002) வினாத்தாள் விடைகளுடன்
தொகுப்பு:- த.தனேந்திரன்
(B.com.(Hons)M.M. spl., H.N. Dip in Acc.
கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம், சிறிலங்கா, சுப்பிரமணிய, துர்க்கா (சுன்னாகம்), நாவலர், பிரியங்கா, சிதம்பரப்பிள்ளை (வடமராட்சி), அறிவமுது (வன்னி), கவிதா (வவுனியா), லங்கா (கொழும்பு). (16296)

விக்னா கல்வி நிறுவனம்
O/L பிரிவு 2 DAY CLASS
ஆரம்பம் : 07.04.2003
(8.30 - 2.00)
பிரிவு 3 வெகு விரைவில்! (16283)

BITSMANS கல்வி நிறுவனம் மானிப்பாய்.
A/L 2004 இரசாயனம்
PAPER CLASS
ஆசிரியர்: திரு.N.மகேஸ்வரன் B.Sc.(Hons)
ஆரம்பம் : 05.04.2003 சனி 4.30 p.m.
அனுமதிகளை முன்கூட்டியே பதிவு செய்யவும். (16269)

வீடு தேவை
கல்வி நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஏற்ற வீடு யாழ். மாநகர சபை எல்லையை அண்டிய பிரதேசங்களில் தேவை. தகுந்த வாடகை வழங்கப்படும்.
தொடர்பு:-
S.T.P. Computer World
54A, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்.
T.P. 222 2674 (16283)

The Barbara Mulvaney Computer Training Centre
123, Temple Road, Jaffna
விடுமுறைக் கால வகுப்புக்கள்!
பாடசாலை விடுமுறையை முன்னிட்டு எமது நிறுவனத்தினால் விசேட கணனி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
வகுப்புக்கள் யாவும் 11-04-2003 அன்று ஆரம்பமாக இருப்பதால் அதற்கு முன்பாக உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்
மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்
T.P.No - 222 5971


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.04.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.